SRI LANKA MUSLIM CONGRESS
COLOMBO

திசை
THISAI

உள்ளே....

- பிரேமா குறிப்பிடும் சதி எது?
- ஜே. ஆர். பிரேமா போராட்டம்!
- கியூபா — ரஷ்யா உறவு பாதிக்கப்படுமா?
- பெண் விடுதலை: கருத்துக்கள், முரண்பாடுகள்.
- அபிவிருத்தியில் விஞ்ஞானமும்தொழில்நுட்பமும்.
- நடிகமணி வைரமுத்துவின் அரங்கம்.
- ஒரு பிடி விசாரம், சிந்தனை மேடை, தூவானம்.

திசை 1 | 11-8-1989 வெள்ளிக்கிழமை | விலை : ரூபா 4-00 | முகம் 31

## சிங்கப்பூரில் அமெரிக்கத் தளம் அமைந்தால்

# அமைதிப் படை விலகல் சாத்தியமில்லை

**சிங்கப்பூரில் அமெரிக்கத் தளமொன்றை அமைக்க சிங்கப்பூர் அரசு ஒப்புக்கொண்டுள்ளதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.**

**சிங்கப்பூரில் அமெரிக்கா தளம் அமைப்பதற்கான நிலை உருவாகுமானால், இலங்கையிலிருந்து இந்திய அமைதிப்படை வெளியேறுவதற்கான சாத்தியக்கூறு மிகவும் அரிதாகும்.**

இந்து சமுத்திரத்தின் ஒரு பக்க நுழைவாயிலில் சிங்கப்பூர் துறைமுகம் அமைந்துள்ளது. ஏற்கனவே டியாகோ கார்சியாவில் அமெரிக்காவின் பெரிய தளம் அமைந்திருக்கும் சூழலில், சிங்கப்பூரிலும் அமெரிக்கத்தளம் அமையுமானால்,இந்து சமுத்திரத்தில் வல்லரசுச் சமநிலை பாதிப்படைந்து அமெரிக்காவின் கை சற்று ஓங்கும். இது இப்பிராந்தியத்தில் இந்தியாவின் முதன்மையைப் பாதிக்கும் என்பதனால், இலங்கையிலிருந்து படைகளை விலக்க இந்தியா விரும்பாது.

இந்திய அரசாங்கம் இலங்கைப் பிரச்சினையைப் பிழையான வழியிற் கையாண்டதனால், பல வழியிலும் இந்தியாவிற்கு அபகீர்த்தி ஏற்பட்டது. இதனால் இந்திய எதிர்க்கட்சிகள் அமைதிப்படையை விலக்கிக் கொள்ள வேண்டுமென்று பெரிதாக வற்புறுத்தத் தொடங்கின.

தேர்தல் சூழல் நெருங்கும் நிலையில் இதனை விழுங்கவும் முடியாமல் கக்கவும் முடியாமல் இருந்த ராஜீவ் அரசாங்கம், சிங்கப்பூர் தள விவகாரத்தைக் காரணம் காட்டி, அமைதிப்படை பற்றிய உள்நாட்டு எதிர்ப்பைச் சமாளிப்பது சாத்தியமாகும்.

இந்தப் போட்டியில் பெரும் அரசுகள் தமிழ் மக்களைப் பகடைக் காயாக்கும் துயரம் மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்களே உள்ளன.

## சகலரும் பொறிக்குள்

இலங்கை இனப்பிரச்சினையானது அதனோடு சம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும் மீளமுடியாத பொறிக்குள் தள்ளியுள்ளது.

இந்திய இராணுவத்தை அழைத்த இலங்கை அரசு, இந்திய இராணுவத்தை வெளியேறுமாறு கோருகிறது. அதேவேளை பிரச்சினையைத் தீர்ப்பதில் வெற்றியடையாத இந்திய அரசு, வெளியேற முடியாத நிலையிலுள்ளது. இதனால் இலங்கையரசுக்கு உள்நாட்டில் எதிர்ப்பு வலுக்கிறது.

இலங்கை அரசின் கோரிக்கையின்படி இந்தியா வெளியேறுது விட்டால், சர்வதேச அரங்கில் இந்தியா நெருக்கடிக்கும் அபகீர்த்திக்கும் உள்ளாகிறது. அதேவேளை பிரச்சினை தீராத இந்த நிலையில் வெளியேறினால் இந்தியாவின் பிராந்திய நலன் பாதிப்படைவதுடன், ராஜீவின் நலனும் பாதிப்படைகிறது.

அதேவேளை இந்தியா வெளியேறுத பட்சத்தில் விடுதலைப் புலிகளின் போராட்டத்திற்கு முகம் கொடுக்கவேண்டும். இராணுவ நடவடிக்கைகளால் மக்கள் தொடர்ந்து மாண்ட வண்ணமுள்ளனர். இதனால் இந்தியா நெருக்கடிக்கு உள்ளாகிறது. இவற்றால் இந்தியா பெரும் அரசியல் பொறியுள் சிக்குண்டு தவிக்கிறது.

அந்த நேரத்தில் இலங்கை அரசும், சகல இயக்கங்களும் இதே பிரச்சினைப் பொறிக்குள் சிக்குண்டு ஒன்றையொன்று விடுபடமுடியாத நிலையில் தவிப்பதும் கவனிக்கத்தக்கது.

## இரவில் வாகனங்களின் இரைச்சல்; காலையில் வீதியோரத்தில் பிணங்கள்

இந்தியப்படை வாபஸ் பெறப்படவேண்டும் என்பதற்காக தென்னிலங்கைப் பகுதியில், ஜே. வி. பி. யினரின் தூண்டுதலில் அண்மையில் கட்டவிழ்த்து விடப்பட்ட எதிர்ப்பு ஊர்வலங்களின் போது, பலர் கொல்லப்பட்டுள்ளனர். கொழும்பு வட்டாரப் பகுதிகளில் மாத்திரம் 200 பேருக்குமேல் கொல்லப்பட்டதாக ஐலண்ட் பத்திரிகை அறிவிக்கிறது.

மலைநாடான கண்டியிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் தற்போது நிலைமை மிகுந்த மோசமான நிலைக்குச் சென்றுள்ளதாகத் தெரிகிறது.

கண்டிப் பகுதியின் சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் ஒருவர் இதுபற்றிக் கூறுகையில், "கடந்த இரண்டு வாரங்களுக்குள் சுமார் 1000 க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டிருக்கலாம் எனக் கூறியுள்ளதாக, சண்டே ரைம்ஸ் அறிவித்திருக்கிறது.

கிராமப்பகுதியிலேயே இவை அதிகமாக நடைபெறுவதாகவும், ஜே.வி.பி யினரின மிரட்டலுக்குப் பயந்தே, பல அப்பாவி மக்கள் ஊர்வலத்தில் பங்குபற்றிப் பலியானதாகவும் அப்பத்திரிகையில், சில கிராமத்தவரின் வாக்குமூலங்களை ஆதாரமாகக் காட்டிக் கூறப்பட்டுள்ளது.

நடுநிசியில் டீசல் வாகனங்களின் இரைச்சலும், தனித்துக்கேட்கும் துப்பாக்கிச் சத்தங்களும், சிங்களக் கிராம மக்களைச் சதா பீதியில் இரவைக் கழிக்க வைக்கிறதாம். அவர்கள் இரவில் தூங்குவதே இல்லை என்று கூடச் சொல்லப்படுகிறது. இரவு நிகழ்ச்சிகளுக்குப்பின் காலையில் விழித்தெழும் மக்கள் சந்திப்பவை, கைகள் பின்னால் கட்டப்பட்ட நிலையில் சுடப்பட்டுக் கிடக்கும் இளைஞர்களின் பிணங்கள்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியா வைக்கும் நிபந்தனை

புதுடில்லியில் இந்தியப்படை விலகல் சம்பந்தமாக ஒருவாரகாலம் நடந்த பேச்சுவார்த்தை பற்றிய அறிக்கை ரஞ்சன் விஜயரத்தினவால் 8. 8. 89 அன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அதில், செப்ரெம்பர் மாதம் நடுப்பகுதி அளவில் இந்தியப்படை முழுவதும் வாபஸ் பெறப்படவேண்டும் என்றும், படைகளை ஏற்றிச் செல்வதில் பிரச்சினை ஏற்பட்டால் படைகள் முகாம்களுக்குள் முடங்கியிருந்து மேலும் சிறிது காலம் தாமதித்துச் செல்லலாமென்றும் இலங்கை கோரியதாகவும், அதற்கு இந்தியா அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் வரை அவகாசம் கோரியதாகவும் கூறப்பட்டுள்ளது.

ஆனால் இந்திய அரசு விதித்த நிபந்தனையை இந்த அறிக்கையில் அமைச்சர் குறிப்பிடாதது முக்கியமாகக் கருதப்படவேண்டும். அதாவது இந்திய அரசு விதித்த நிபந்தனைகளுள் ஒன்று, விடுதலைப் புலிகள் உட்பட சகல இயக்கங்களும், சகல தரப்பினரும் அ. வரதராஜப் பெருமாள் தலைமையிலான இன்றைய வடக்கு—கிழக்கு மாகாண அரசாங்கத்தை அங்கீகரிக்கவேண்டுமென்றும், அப்படி அங்கீகரித்தால் வாராந்தம் 1500 படையினர் வரை வாபஸ் வாங்கப்படலாமென்றும், இதன்படி பெப்ரவரி மாதமளவில் படை விலகல் பூர்த்தியாகலாம் என்பதே.

இந்த நிபந்தனையை விடுதலைப் புலிகள் இயக்கம் ஏற்றுக்கொள்ள மாட்டாதென்பதை, இந்திய அரசு நன்கு அறியும். அதனால் அது நிறைவேற்றப்படமுடியாத நிபந்தனை என்பதும் வெளிப்படையே. இந்நிலையில் இலங்கையிலிருந்து இந்தியப் படைகள் வாபஸ் பெறப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை யென்று, ராஜதந்திரிகள் அபிப்பிராயப்படுகின்றனர். ஆனால் இந்த உண்மையை தமது சிங்கள மக்கள் மத்தியில் அப்படியே வெளிப்படுத்தினால் அது, ஜே. வி. பி. யையே மேலோங்கச் செய்யும் என்பதால் அரசு அதை வெளிக்காட்டாது பின்னடிக்கிறது. இதனால் முடிந்தவரை இந்த அமசத்தை மழுங்கடித்து, ஊசலாடிக் கொண்டிருக்கும் தனது உயிரைக் காப்பாற்றப் பார்க்கிறது, அரசு.

## தேசிய அரசாங்கம் பற்றி 'இ. தொ. கா.'

இன்று இலங்கையில் எழுந்துள்ள நெருக்கடிகளைச் சமாளிப்பதற்குரிய வழியாக சர்வகட்சி மாநாடு ஒன்று கூட்டி கலந்தாலோசிக்கப்பட வேண்டும் என்றும், அதன் அடிப்படையில் தேசிய அரசாங்கம் அமைப்பது உகந்தது என்றும் லிபரல் கட்சித் தலைவரான கலாநிதி சனக அமரதுங்க முன்வைத்த கருத்துக்களை இலங்கைத் தொழிலாளர், கொங்கிரஸின் அரசியல் குழு நிராகரித்து, பின்வருமாறு கருத்துத் தெரிவித்துள்ளது :

சர்வகட்சி மாநாட்டின் மூலம் பிரச்சினைகள் தீர்க்கப்படலாம் என்பது யதார்த்தத்துக்குப் புறம்பானது; இதனால் எதுவும் சாத்தியப்படப் போவதுமில்லை. இது சாத்தியப்படவேண்டுமானால் திட்டவட்டமான அரசியல் விஞ்ஞாபனம் ஒன்று தயாரிக்கப்பட்ட பின்னரே கூட்டப்படவேண்டும்.

மேலும் இதுகாலவரை இலங்கையிலுள்ள எந்தக் கட்சியாவது, பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன்வந்ததில்லை. குறிப்பாக இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இவைகள் உடன்பாடு கண்டதே இல்லை. தற்போதுள்ள இலங்கை இந்திய ஒப்பந்த அமுலாக்கலிலும் இதுவே நிலை. அத்தோடு இத்தகைய கருத்து வேறுபாடுகளைத் தீர்த்து கட்சிகளை இணங்க வைப்பதற்கு, தேசிய அரசாங்கமும் தேவைப்படாதென்றே நாம் கருதுகிறோம்.

'சற்றடே றிவியூ'வின் சகோதர வாரப் பத்திரிகை

திசை
THISAI

ஆசிரியர்:
மு. பொன்னம்பலம்

சந்தா விபரங்கள்:
(உள்நாட்டுத் தபாற் கட்டணத்தையும், வெளிநாட்டுத் தபாற் கட்டணத்தையும் உள்ளடக்கியது.)

இலங்கை
ஒரு வருடம்-ரூபா: 225/-
அரைவருடம்-ரூபா: 115/-

இந்தியா
ஒரு வருடம்-ரூபா: 300/-
(இந்திய ரூபா)

சிங்கப்பூர் / மலேசியா
ஒரு வருடம் -
யு.எஸ்.டொலர் 40

ஏனைய நாடுகள்
ஒரு வருடம் -
யு.எஸ்.டொலர் 60

காசோலைகள் அனைத்தும் நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் லிமிட்டெட் (New Era Publications Ltd.) என்றே, எழுதப்பட வேண்டும்.

பத்திரிகை விநியோகம், சந்தாப்பணம், விளம்பரம் போன்ற நிர்வாகத் தொடர்பு முகவரி:

118, 4ஆம் குறுக்குத்தெரு
த. பெ. 122,
யாழ்ப்பாணம்

# தமிழ்-முஸ்லிம் பிரச்சினை பேரினவாதிகளின் சதியே!

தங்கள் 'திசை' பத்திரிகையின் 26. 5. 89 அன்றைய இதழைப் பார்த்து, எம் அமைப்பு மட்டற்ற மகிழ்ச்சியடைகிறது.

அப்பத்திரிகையில் தமிழ்—முஸ்லிம் உறவின் அவசியத்தைத் தாங்கள் தெட்டத்தெளிவாக, மிகத்துல்லியமாக எடுத்துக் காட்டியுள்ளீர்கள். 1985 ஆம் ஆண்டுக்குப்பின் வெளிவரும் தமிழ் பத்திரிகைகளில், தமிழ்—முஸ்லிம் ஒற்றுமையை மனச்சாட்சிக்கு விரோதமில்லாது நடுநிலையாக எடுத்துக்கூறியது திசை மட்டுமே என்பது நிதர்சனமான உண்மை.

அண்மைக் காலமாக கிழக்கில் தமிழ்—முஸ்லிம் மக்களுக்கிடையே அடிக்கடி பிரச்சினைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதனுல் அப்பாவி தமிழ்—முஸ்லிம் மக்கள் சொல்லொணுத் துயரங்களை அனுபவித்த வண்ணமிருக்கின்றனர்.

தமிழ் பேசும் மக்கள் வாழும் இம்மண்ணிலே சகோதரர்களாக வாழ்ந்த இரு சமூகங்கள் பேரினவாத சக்திகளின் திட்டமிட்ட சதியினுல் ஒன்றை ஒன்று சந்தேகக் கண்கொண்டு பார்க்கின்ற துரதிர்ஷ்டநிலை ஏற்பட்டுள்ளது. இதனுல் இலாபமடைந்தவர்கள் யார் என்பதை எம் மக்கள் இன்னும் தெளிவு பெருமலே இருக்கின்றனர்.

நடந்தவை நடந்தவைகளாக இருக்க, இனி நடப்பவை நல்லவைகளாக அமைய, தங்கள் பத்திரிகை தொடர்ந்தும் தன் சேவையை வழங்கவேண்டுமென வாழ்த்துகிறோம்.

முஸ்லிம் ஐக்கிய மாணவர் அமைப்பு, சம்மாந்துறை.



## முதலிலிருந்து கடைசி வரை

'திசை' மிகச் சிறப்பாக வந்து கொண்டிருக்கிறது. முதல் பக்கத்திலிருந்து கடைசிப் பக்கம் வரை படிக்கவும் சிந்திக்கவும் தூண்டுகிற ஒரு பத்திரிகை. 5 கோடிப் பேருள்ள தமிழ்நாட்டில் 'திசை' யின் தரத்திலுள்ள ஒரு பத்திரிகை கூட இல்லை. எத்தனையோ இடையூறுகளுக்கும் சோதனைகளுக்குமிடையில் இப்படி ஒரு பத்திரிகையை நடத்திவரும் தங்களைப் போன்றோரை எப்படிப் பாராட்டுவது என்பதே தெரியவில்லை.

எஸ். வி. ராஜதுரை
சென்னை.

## 'திசை' நீடிக்க விளம்பரங்கள் தேவை

உக்ரேனில் நடந்த கவிஞர் ஷெவ்சேன்கோ 175 ஆம் விழாவில் கலந்தபின் சென்ற கிழமையே வீடு வந்தேன்.

உங்களுக்குப் பலமுறையும் எழுத முனைந்தும் தடங்கல்கள் முடக்கி விட்டன 'திசை' இதழ்கள் பி. எஸ். ராமையா வெளியிட்ட 'மணிக்கொடி' மாசிகையை விட அதற்கு முன்னோடியாகவிருந்த ஸ்டாலின் சீனிவாசன், வ. ரா., புதுமைப் பித்தன், டி. எஸ். சொக்கலிங்கம் ஆகியோர் நடத்திய 'மணிக்கொடி' கிழமை இதழ்களை ஞாபகப்படுத்துகிறது. உருவிலும் உள்ளடக்கத்திலும் கூட — 'திசை' அத்தகைய புதிய யுகத்தைத் தோற்றுவிக்க வேண்டும் என நீங்கள் முன்னொரு இதழில் குறித்தபடி விழைகிறேன். ஆர்வம் ஒருபுறமிருக்க சஞ்சிகை வெளியிட்டவன் என்ற அனுபவத்தில் ஒரு சிறு ஆலோசனை. சஞ்சிகைகளின் வெற்றி விளம்பரம் பெறுவதில்தான் உள்ளது — வாசன் இதனை உணர்ந்து செயல்பட்டு வெற்றி கண்டார். 'திசை' ஏடுகளைத் திருப்பினுல் விளம்பரங்கள் பஞ்சையாகவே உள்ளன. தமிழர்கட்குப் பணிபுரியும் இவ்வுயரிய ஏட்டினை நடத்த வணிகப் பெருமக்கள் விளம்பரங்களைத் தந்து உதவத் தயங்கமாட்டார்கள். அத்துறையில் கவனம் செலுத்தவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

கே. கணேஷ்
தலாத்துஓயா.

## திசைக்கு எனது ஓவியங்கள்

நான் ஓர் ஓவியத்தில் நாட்டம் கொண்ட அன்பன். தங்கள் 'திசை' பத்திரிகையினைத் தொடர்ந்து வாசித்து வருபவன். இவ்வகையில் எனது சில ஓவிய ஆக்கங்களை இப்பத்திரிகைக்கு அனுப்பி வைக்கிறேன். இவை முறையே ஒப்பாரி, மனிதத்தின் படுகொலை என்ற தலையங்கங்களின் கீழ் வரையப்பட்டவை. இவ்வாக்கங்கள் பிரசுரிக்கக் கூடியவையாக இருப்பின் தகுந்த கட்டுரைகளுக்கிடையேயோ, அல்லாவிடில் வேறெந்த வகையிலோ பிரசுரிக்கவும்.

கேந்ரா
யாழ்ப்பாணம்.

# "சீட்டு"ப் பிடித்தல் பல நாடுகளில்!

உலகவங்கியால் வெளியிடப்பட்டுள்ள உலக அபிவிருத்தியறிக்கை — 1989 என்ற பகுதியில் இலங்கையில் மத்திய தர வகுப்பு மக்களிடையேயும் அவர்களுக்கு குறைவானவர்களுக்கிடையேயும் சேமிப்பு நோக்குக்காகப் புழக்கத்திலுள்ள "சீட்டுப் பிடித்தல்" பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி மேலும் அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

மக்கள் மிகுந்த கஷ்டத்தின் மத்தியிலும் பணத்தைச் சேமிப்பதற்குச் சீட்டுமுறை பயன்படுகிறது, அத்தோடு இது பல நாடுகளில் பல பெயர்களில் நடைமுறையில் உள்ளது. இலங்கை - இந்தியாவில் சீட்டு என்றும், மெக்ஸிக்கோவில் ரண்டா என்றும், எகிப்தில் கமையா என்றும், சீனுவில் ஹுய் என்றும், ஜப்பானில் கோ என்றும் இது அழைக்கப்படுகிறது.

# மாலைதீவுச் சதிப்புரட்சியும் உமாவின் கொலையும்

மாலைதீவுச் சதிப் புரட்சிக்கும், உமாமகேஸ்வரனின் மரணத்திற்கும் இடையில் நெருங்கிய தொடர்பிருப்பதாக ஊகங்கள் அடிபடுகின்றன.

உமாமகேஸ்வரன் தமிழ் இளைஞர்கள் சிலரை இச்சதிப் புரட்சியில் ஈடுபடுத்தியதாகவும், இதன் பின்னணியை உணர்ந்துகொண்ட உமாமகேஸ்வரனின் சகாக்கள் சிலர் இதனை எதிர்த்ததாகவும், அதன் விளைவாகவே உமாமகேஸ்வரன் அவரது சகாக்கள் சிலரால் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும், கருதப்படுகின்றது.

# இந்து சமுத்திரத்தில் அமெரிக்கா!

இந்துசமுத்திரப் பிராந்தியத்தை அமைதி வலயமாக மாற்றுதல் சம்பந்தமாக நியூயோர்க்கில் நடைபெற்ற ஐ.நா. விசேட குழுக்கூட்டம், கொழும்பில் நடைபெறவிருந்த இதுபற்றிய மாநாடு 1990 இல் இடம்பெற மாட்டாதெனத் தெரிவித்துள்ளது.

அமெரிக்க - சோவியத் உறவுகள் சீராகிய பின்னர் இம்மாநாடு கூட்டப்படுவதற்குத் தடையெதுவும் இருக்காதென, இந்துசமுத்திர நாடுகள் நம்பியிருந்தன, ஆனுல் தற்போது அமெரிக்கா, இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் கடற்படை ஆதிக்கம் வைத்திருக்க விரும்புகிறது. ஆகவே இதை அமைதிப்பிராந்தியம் ஆக்குவதற்குத் தடையேற்பட்டுள்ளதாக மூன்றும் உலக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

## உயரம் பாய்தலில் உலக சாதனை!

கியூபாவைச் சேர்ந்த விளையாட்டு வீரரான ஜேவியர் சோட்டோமேயர் உயரம் பாய்தலில் 2.44 மீற்றர் (8 அடி) பாய்ந்து, தனது முந்திய உலக சாதனையை முறியடித்தார். போட்டோறிக்காவில் நடந்த விளையாட்டுப் போட்டியிலேயே இச் சாதனை நிகழ்த்தப்பட்டது.

சென்றவருடம் செப்ரெம்பரில் ஸ்பெயினில் நடந்த போட்டியில், 2.43 மீற்றர் உயரப் பாய்ந்து உலகசாதனை படைத்த சோட்டோமேயர் சியோல் ஒலிம்பிக்கைக் கியூபா பகிஷ்கரித்ததால் அதில் கலந்து கொள்ளவில்லையென்பதும், குறிப்பிடத்தக்கது.

## உலகப் புத்தகச் சந்தை

ஏழாவது சர்வதேசப் புத்தகச் சந்தை செப்ரெம்பர் 12-18 வரை மொஸ்கோவில் நடைபெறும்.

100 நாடுகளைச் சேர்ந்த 3000 புத்தக நிறுவனங்கள் கலந்துகொள்ளும் இச் சந்தையில், இலங்கையைச் சேர்ந்த 'புக் சென்ரர்', 'லேக் ஹவுஸ் புக்ஷொப்' ஆகியன்வும் கலந்துகொள்ளவுள்ளன.

## பரிசளிப்பு வைபவம்

'திசை'யின் சிறுகதைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கும் வைபவம், நாளை சனிக்கிழமை மு. ப. 10.00 மணிக்கு 'திசை' அலுவலகத்தில் நடைபெறும்

## மின் வேலி

அந்த நாட்டின் சட்டப்படி விவாகரத்து வழக்கொன்றை தாக்கல் செய்வதற்கு முன் ஒரு வருடம் பிரிந்து இருந்திருக்க வேண்டும்.

இத்தம்பதியர் சிறு வீடொன்றில் வாழ்ந்து வந்தனர். வேறு பெரிய வீடு வாங்க வழியின்றி. எனவே ஒரு பற்றறி மின் சக்தியூட்டிய முட்கம்பி வேலியை தம் இரு கட்டில்களுக்கிடையில் நிறுவி ஒரு வருட காலம் பிரிந்திருந்தனர்.

ஆதாரம்; தி ஐலன்ட்

## ஊரடங்கும் 'பாசமலரும்'

வெள்ளவத்தையில் வசதியாக அமைந்துள்ள ஹொட்டேல் ஒன்றில் ஏமாற்றும் ஏஜென்சி'களில் காசு கட்டிய, வசதியான யாழ்ப்பாணத் தமிழர் தங்குவது வழக்கம். சில பகுதிகளை ஏஜென்சி முகவர்களே வாடகைக்கு எடுத்து, வெளிநாட்டுப் பயணத்துக்காகத் தாம் காசு வேண்டிய தமிழர்களைத் தங்க வைத்திருக்கிறுர்கள்.

சமீபத்தில் நடைமுறைப் படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டத்தின் போது, போகாத பொழுதைப் போக்குவதற்காக ஹொட்டேலில் இதற்கென அமைந்த இடத்தில், பாசமலர் வீடியோப்படத்தை ஓடியுள்ளார்கள். ஹொட்டேலில் வேலை பார்க்கும் சிங்களச் சிப்பந்திகள் படத்தை இடையில் நிறுத்தி, தமிழரையும் பயமுறுத்தியுள்ளனர்.

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டதுதான் தாமதம் பலர் பகலோடு பகலாக இடத்தைக் காலி செய்து விட்டார்களாம். இதில் இரகசியம் என்னவென்ருல், இந்த ஹொட்டேலைக் கொமிஷன் அடிப்படையில் நடத்திவருகிறவர் ஒரு யாழ்ப்பாணத் தமிழர்!

## விடயங்கள் அனுப்புவோரின் கவனத்திற்கு

☐ எந்தவிடயமும் அரைத் தாளில் 2½ பக்கங்களிற்கு மேற்படாதிருத்தல் நல்லது. தவிர்க்கவியலாதவிடத்து மட்டும் 4 பக்கங்கள் வரை எழுதப்படலாம்.

☐ தெளிவானதாக, தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதப்படவேண்டும்.

☐ பெயர், முகவரி இல்லாத விடயங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

☐ தகுதியானவை கட்டாயம் வெளியிடப்படும். பிரசுரம் தொடர்பான கடிதத் தொடர்புகள் மேற்கொள்ளப்படமாட்டாது.

# மூன்றும் உலகின் அபிவிருத்தியில் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்

பேராசிரியர் அப்துஸ் சலாம் பௌதிகத்துக்கான நோபல் பரிசினை 1979ஆம் ஆண்டு பெற்ற பாகிஸ்தானிய விஞ்ஞானி; 'மூன்றும் உலக விஞ்ஞானக் கல்விக் கழகத்தின்' பிதாமகர். 'மூன்றும் உலக நாடுகளின் அபிவிருத்தியில் விஞ்ஞானமும் தொழில் நுட்பமும்' எனும் தலைப்பில், கொழும்பில் இவர் ஆற்றிய உரையின் சுருக்கம், இங்கு தரப்படுகிறது.

இலங்கை தனது மொத்த தேசிய உற்பத்தியில் 1.7 வீதத்தை பாதுகாப்பிற்கும், 1.3 வீதத்தை சுகாதாரத்திற்கும், 2.8 வீதத்தை கல்விக்கும் செலவழிக்கிறது. ஆனால் விஞ்ஞானத்திற்கும் தொழில்நுட்பத்திற்குமென 0 2 வீதத்தையே செலவழிக்கிறது. மொத்த தேசிய உற்பத்தியில் விஞ்ஞானத்திற்கென அதிக தொகையை ஒதுக்குவோமெனில், நாமடையும் நன்மையும் அதற்கேற்ப அதிகரிக்கும். விஞ்ஞானத்திற்கென அதிக தொகையை ஒதுக்காமல் வளர்முக நாடொன்று தனது மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதென்பது சாத்தியமாகாது. வளர்முக நாடுகள் வரவு செலவுத்திட்டத்தில் கல்விக்கு ஒதுக்கும் தொகையில் குறைந்தது ஆறிலொரு பங்கை விஞ்ஞானத்திற்கு ஒதுக்குவது அவசியம். இதன்படி விஞ்ஞானத்திற்கென இலங்கை ஒதுக்கும் 11.9 மில்லியன் அமெரிக்க டொலரை 29 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்தல் வேண்டும்.

மூன்றும் உலக விஞ்ஞானக் கல்விக் கழகத்தின் கணிப்பீட்டின் படி, வளர்முக நாடுகள் ஒவ்வொன்றும் வரவு செலவுத்திட்டத்தில் கல்விக்கு ஒதுக்கும் தொகையில் ஆறிலொரு பங்கை விஞ்ஞானத்திற்கும், விஞ்ஞானம் சார்ந்த உயர் தொழில் நுட்பங்களுக்கும் பயன்படுத்தவேண்டுமெனில் 14 5 மில்லியன் அமெரிக்க டொலர்களை அவை தமது சொந்த மூலவளங்களிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

வரவு செலவுத்திட்டத்தில் கல்விக்கு ஒதுக்கும் தொகையில் விஞ்ஞானத்திற்கும். உயர் தொழில்நுட்பத்திற்கும் அதிக தொகையைப் பயன்படுத்துவதென்பது கல்வியின் ஏனைய பகுதிகளுக்கான தொகையில் குறைப்புச் செய்வதாகக் கருதக்கூடாது. பாதுகாப்புச் செலவைக் குறைத்தலும் வேறு வழிகளில் சிக்கனப்படுத்தும் நடவடிக்கைகள் மூலமும் இதற்கானதொகையை ஈட்டிக் கொள்ளவேண்டும்.

தமிழில் : சி. ஜெயசங்கர்

விஞ்ஞானத்தின் பயனுள்ள வழிகளுக்கு போதியளவு நிதியைப் பயன்படுத்தாவிடின் எமது நாடுகள் தற்போது எதிர்நோக்கும் பொருளாதார பின்னடைவுகளிலிருந்து மீள முடியாது போய்விடும். உருவாக்குதல், நிபுணத்துவமடைதல், விஞ்ஞானத்தையும் தொழில்நுட்பத்தையும் உரிய முறையில் பயன்படுத்துதல் என்பவற்றில்தான் வளர்முக நாடுகளும், வளர்ந்த நாடுகளும் பேதப்பட்டுக் கொள்கின்றன என்பதை மூன்றும் உலக நாடுகள் இப்போது மெல்ல மெல்ல உணரத் தொடங்கியுள்ளன. பொருளாதார அமைப்பு முறையிலோ, ஆட்சி முறையிலோ, கலாசார பழக்கவழக்கங்களிலோ, சமயசிந்தனைகளிலோ, வளர்ந்த நாடுகளுக்கும் வளர்முக நாடுகளுக்குமான இடைவெளி தங்கியிருக்கவில்லை. அடிப்படையில் இவ்விடைவெளி விஞ்ஞான தொழில்நுட்பரீதியான இடைவெளியேயாகும். எனவே ஒரு நாட்டின் வாழ்க்கைத்தரம் விஞ்ஞானத்திலும், தொழில் நுட்பத்திலுமே தங்கியுள்ளது.

அபிவிருத்திக்கு விஞ்ஞானம், தொழில்நுட்பத்தைப் பிரயோகிக்கும்போது நீண்டகால தன்மையுடைய திட்டங்களை நாம் மனதிலிருத்திக் கொள்ளவேண்டும். எமது பணியை இன்றே தொடங்குவோமானால் 2000 ஆண்டு எமது இலக்குக்குரிய சிறந்த ஆண்டாக அமையும்.

பல வளர்முகநாடுகள் விஞ்ஞானம், தொழில்நுட்பத்தில் முதலீடு செய்து போதியளவு வருவாயைப் பெற்றுள்ளன. இதற்கேற்ப விஞ்ஞானம், தொழில்நுட்பத்திற்கெனவரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. உதாரணமாக வெனிசுலா தனது மொத்தத் தேசிய உற்பத்தியில் 0.4 வீதத்தை விஞ்ஞானம், தொழில்நுட்பத்துக்கு ஒதுக்குகிறது. இன்னும் 5 ஆண்டுகளில் இதனை 2 வீதமாக உயர்த்துவதாக அறிவித்துள்ளது. மொத்தத் தேசிய உற்பத்தியில் விஞ்ஞானத்திற்கு 0.5 வீதத்தை ஒதுக்கும் ஈரான் உடனடியாக இதனை 1 வீதத்திற்கும் பின் 2 வீதத்திற்கும் உயர்த்தத் திட்டமிட்டுள்ளது. மூன்றும் உலக நாடுகளில் பொருளாதார ஸ்திரத்தன்மையடைந்து வரும் தென்கொரியா மொத்தத் தேசிய உற்பத்தியில் விஞ்ஞானம், தொழில்நுட்பத்திற்கு ஒதுக்கும் தொகையை 2 வீதத்திலிருந்து 3 வீதமாக உயர்த்தியுள்ளது.

விஞ்ஞானிகள் இவ்வாறான புள்ளி விபரங்களுடன் பரிச்சயமாக வேண்டும். தமது நாட்டின் மொத்தத்தேசிய உற்பத்தி என்ன என்பதை அறியாதிருக்கும் இயற்கை விஞ்ஞானிகளையும் நான் சந்தித்துள்ளேன். இந்நிலை மாற வேண்டும். விஞ்ஞானிகள் பொருளாதார மந்தநிலைக்கான காரணிகளை மட்டும் அறிந்து வைத்திருப்பதோடல்லாமல், இதற்கான நிதியை ஈட்டுவதற்கான வழிவகைகளையும் கண்டறிந்து கொள்ள வேண்டும்.

மூன்றும் உலக நாடுகளில் விஞ்ஞானம், தொழில்நுட்பம் இடர்படுவதற்கான 3 முக்கிய காரணங்களாக அமைவன :

1) விஞ்ஞானத்தை நோக்கிய அர்த்தமுள்ள ஈடுபாடுகளின் குறைவு – இது அடிப்படையாகவோ, அல்லது பிரயோகரீதியாகவோ தொழில்நுட்பத் துறையில் தன்னில் தங்கியிருக்கும் நிலையை அடையக் கூடிய ஈடுபாட்டுக் குறைவு.

2) நிறுவனரீதியான கட்டுக் கோப்பும், சட்டரீதியான கட்டுக்கோப்பும் இல்லாதிருத்தல்.

3) விஞ்ஞான நடவடிக்கைகளைப் பயன்படுத்தும் நோக்கங்கள்.

விஞ்ஞான முன்னேற்றம் தனிநபர்களது வல்லமையில் தங்கியுள்ளது. விஞ்ஞான முயற்சிகளைக் கொண்டு செல்பவர்களாக விஞ்ஞானிகளே இருக்கவேண்டும். அதிகாரிகளோ அல்லது முன்னொரு பொழுது செயலூக்கத்துடன் தொழிற்பட்ட விஞ்ஞானிகளோ அல்ல.

விஞ்ஞானம் விமர்சனத்தினாலும், எதிர்க்கருத்துக்களைத் தாங்கிக் கொள்ளலாலும் வளர்ச்சியடைய முடியும்.

நன்றி : தி. ஐலண்ட் □

# பிரேமா குறிப்பிடும் சதி எது? இலங்கையின் எதிர்காலம் என்ன?

தனக்கு எதிரான சில அரசியல் சதி நடவடிக்கைகளை தான் வெற்றிகொண்டு விட்டதாக பிரேமதாஸ கூறியிருந்தமை அனைவரும் அறிந்ததே.

தனது பதவியை நிலைநாட்ட பிரேமதாஸ ஐ. தே. க. வுக்குள் பெரும் பிரயத்தனங்களை மேற்கொள்ள வேண்டி இருந்ததென்பதும் வெளிப்படையே.

அப்படியாயின் இந்தச் சதி நடவடிக்கைகள் கட்சிக்குள்ளிருந்தும், அரசியலிலிருந்து ''ஓய்வு'' பெற்றவரிடமிருந்துந்தான் ஏற்படுகின்றதா என்ற ஐயம் எழுகின்றது,

ஜே. வி. பி. யின் கிளர்ச்சி வளரும் பட்சத்தில் தற்போது ஆட்சியில் இருக்கும் அரசாங்கம் தளர்வடையும் போது, அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு ஒரு குழு முனைப்புடன் இருந்ததாக அறியமுடிகிறது. அந்தக் குழு முதலில் இராணுவச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தி, ஜே. வி. பி. க்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டு, பின்பு அரசியலிலிருந்து ''ஓய்வு'' பெற்றவரை ஜனாதிபதிப் பதவிக்கு அமர்த்தும் நோக்கத்தை தக்கூடக் கொண்டிருந்ததாகவும் அறிய முடிகிறது.

முன்னாள் ஜனாதிபதி ஒருவர், பின்வரிசைக்குத் தள்ளப்பட்டுள்ள இரண்டு அமைச்சர்கள், முன்னாள் ஜனாதிபதி ஒருவரின் மகன் ஆகியோர்களை உள்ளடக்கிய குழு இப்படி ஒரு அபிலாஷையுடன் காத்திருந்ததாகக் கூறப்படுகிறது.

சுதேசி

ஜே. வி. பி. யின் பிரச்சினையைச் சாட்டாகக் கொண்டு இக்குழு பதவிக்குவர எத்தனித்திருந்ததால், ஜே. வி. பி. க்கு எதிரான — பலம் பொருந்திய நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டிய தேவை இன்றைய ஜனாதிபதிக்கு ஏற்பட்டது. எனவே ஜே. வி. பி. யினரை பின்னடைய வைப்பதற்குரிய முக்கிய நடவடிக்கையாக, இந்திய அமைதிப் படை வெளியேற வேண்டும் என்ற தீர்மானத்தை, ஜனாதிபதி திடீரென அறிவித்தார்.

இதன் சாத்தியமின்மை பற்றி ஜனாதிபதிக்குத் தெரியாமல் இருக்க முடியாது. ஆனால் இவ்வாறான திருப்பம்மிக்க நடவடிக்கை ஒன்றின் மூலம் தான், நிலைமையைச் சற்றுத் திசை திருப்பி தனது பதவியை மேலும் தக்கவைக்கலாம் என்று, அவர் எண்ணி இருக்க வேண்டும்.

ஜே. வி. பி.யின் நடவடிக்கை உக்கிரமடைந்து, அதனால் தற்போதைய அரசு ஸ்தம்பிதத்தின் உச்ச நிலையை அடைந்திருக்குமானால், மேற்படி குழு ஆட்சியைக் கைப்பற்றி இராணுவ ஆட்சியைப் பிரகடனப்படுத்தியிருக்கும், முன்னாள் ஜனாதிபதி ஒருவரின் மகன் இராணுவ ஆட்சியாளனாய்வர, சிறிது காலம் இராணுவ ஆட்சி நீடித்திருக்கும்.

பின்பு முன்னாள் ஜனாதிபதி ஒருவர் நாடாளுமன்றத்தில் உறுப்பினராக நியமனம் பெற்று, அவர் இடைக்கால ஜனாதிபதியாக நாடாளுமன்றத்தில் தெரிவாகும் சூழல் ஒன்றும் ஏற்பட்டிருக்கும் என்று தற்போது தெரியவருகிறது.

இந்த ஆபத்து தற்போது இல்லாது போய் விட்டதா? இல்லை, இன்னும் தொடர்கிறது. அப்படியாயின் தென்னிலங்கை அரசியலில் பெரும் இரத்தக்களரி ஏற்படப் போகிறது. ஆனால் இனி எந்தச் சக்திகளாலும், எந்த வல்லுனர்களாலும் இலங்கையின் பிரச்சினைக்கு ஒடுக்கு முறையில் தீர்வுகாண முடியாது.

தமிழ்ப் பகுதிகளில் இலங்கை ஆட்சியாளர்களினால் ஏற்படுத்தப்பட்ட புண்ணின் நெறிகட்டல் தான் தென்னிலங்கையின் இன்றைய இரத்தக்களரியாகும், எனவே தமிழ் மக்களுக்கு விடுதலை இல்லையென்றால் சிங்கள மக்களுக்கும் விடுதலை இருக்க முடியாது என்பதை, அனைத்துத் தரப்பினரும் உணர வேண்டும். □

# மாலைதீவில் சதிப்புரட்சி: எய்தவன் இருக்க...

மாலைதீவுச் சதிப்புரட்சியில் ஈடுபட்டதாகக் கூறி ஆறு இலங்கைத் தமிழ் இளைஞர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் எட்டு இளைஞர்களுக்கு, மனித நடமாட்டமற்ற தீவில் ஆயுள் கால வாசம் பண்ணும் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பெரிய, நீண்டகால அரசியற் சதி நோக்கின் பின்னணியில் எமது அப்பாவி இளைஞர்கள், ஏமாளிகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளனர். அதன் வெற்றியை சில சக்திகள் அனுபவிக்கலாம்; ஆனால் அதற்காக எமது இளைஞர்கள் அநியாயமாக பலியிடப்பட்டுள்ளனரே !

இந்த இளைஞர்களைப் பயன்படுத்தியவர்கள் இதனைச் சுயலாபத்துக்காகவே செய்திருக்கின்றனர். ஆனால், தாம் இப்படி பிறரின் கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டனர் என்று, அந்த இளைஞர்கள் எண்ணவில்லை. மாறாக தமிழீழ அரசை அமைப்பதற்கு மாலைதீவை ஒரு தளமாகப் பயன்படுத்தலாம் என்ற ஆசை வார்த்தையை நம்பியே, இந்த இளைஞர்கள் இதில் ஈடுபட்டனரெனத் தெரிகிறது.

எய்தவனும், எய்ய அம்பு எடுத்துக் கொடுத்தவனும் தப்ப, எய்யப்பட்ட அம்பு மட்டும் தண்டிக்கப்படுகின்றது. இப்படி பிறர்கையில் அம்பாய்ச் செயற்படுவதுதான் தமிழ் இளைஞரின் தலைவிதியோ? யாரை நோவது? □

# நிலைமைதான் மாறாதோ?

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் காலகட்டம் தமிழினின் வரலாற்றில் முக்கியமானதொரு காலகட்டமாகும். துன்ப துயர நோக்காடுகளைச் சுமந்து பற்பல மாற்றங்களுக்கூடாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இக்கால கட்டத்தில் ஏற்படும் மாற்றங்கள் எமது வரலாற்றில் முக்கிய பாதிப்பினை ஏற்படுத்தப்போவது திண்ணம்.

பரந்துபட்ட நோக்கு நிலையிலிருந்து பார்க்கும்பொழுது, பல்கலைக்கழகமானது இம்மாற்றங்களில் ஒரு காத்திரமான பங்களிப்பைச் செய்ய வேண்டிய கடப்பாடுடைய ஒரு ஸ்தாபனமாகவே, தோன்றுகிறது.

சமூக, அரசியல் மாற்றத்தில் கணிசமான பங்களிப்பையாற்றக்கூடிய நிலை இல்லாவிடினும், அறிவியல் மட்டத்திலும் கலை, இலக்கியத் துறையிலும் பல்கலைக்கழகமானது நிச்சயமாகத் தனது பொறுப்பையுணர வேண்டும்.

அண்மையில் நடைபெற்று வரும் சில நிகழ்வுகளை நோக்குங்கால் எமது பல்கலைக்கழகமானது சமூக வளர்ச்சியில் தனது கடப்பாடுகளைச் சரிவர உணரவில்லைபோல் தென்படுகிறது. யாழ். பல்கலைக்கழகத் தமிழ் மன்றத்தால் தொடராக நடாத்தப்பட்டு வரும் 'சிந்தனை அரங்குகள்' இதற்கு நல்ல எடுத்துக்காட்டு. கடைசியாக நடைபெற்ற, சினி

**சாரங்கன்**

மாப் பாடல்களின் இலக்கியத்தரம் பற்றிய பட்டிமன்றம் இவற்றுக்கெல்லாம் மகுடமாகத் திகழ்கிறது.

இதற்கு முந்தைய 'இன்றைய பெண்கள் பாரதி கண்ட புதுமைப் பெண்களா?' என்ற பட்டிமன்றத்தில், நடுவராவது ஒரு தீர்க்கமான பார்வையைக் கொண்டிருந்தார்; இம்முறை அதுவும் இல்லை.

காதல் மட்டும்தான் இலக்கியமாகும் என்ற நிலையில் சில பாடல்களுடன் ஆரம்பித்து, சில சிந்தனை வளம் பெற்ற மாணவர்களால் இடையில் ஓரளவிற்குச் சீர்திருத்தப்பட்டாலும், ஈற்றில் வந்த நடுவர் காதலுக்காக வக்காலத்து வாங்கி, இலக்கிய நயம் காதலைப்பற்றிச் சொல்வதனால்தான் ஏற்படுகிறதோ என்ற ஐயப்பாட்டினை ஏற்படுத்தி விட்டார்.

இந்தப் பட்டிமன்றத்தில் பங்குபற்றிய (நடுவர் உட்பட) எல்லோருமே இளவயதினர் என்பதால்தான், இலக்கியம் இவ்வளவு குறுகிவிட்டதோ? தயவுசெய்து இலக்கியத்துறையிலே முதிர்ந்தவர்கள் இதனைக் கருத்திலெடுக்க வேண்டும். இந்நிகழ்வைப் பொறுத்தவரையில் ஓரளவிற்காவது சோபித்தவராக ''இன்றைய சினிமாப்பாடல்கள் இலக்கியத்தரம் வாய்ந்தவை'' என்று வாதிட்ட குழுவின் தலைவரைக் குறிப்பிடலாம். இவரது கருத்துக்கள் காதலைச் சுற்றிக் குறுக்குப்பட்டிருந்தாலும் இலக்கியநயமும் பரந்த அடிப்படையிலான இலக்கிய மேற்கோள்களும், சரளமான மொழி நடையும் இவரது சிந்தனையாழத்திற்கும், மொழிப் பிரயோகத்திற்கும் சான்று பகன்றன.

சென்ற தடவை நடைபெற்ற பட்டிமன்றத்திற்கு எனது நண்பர்கள் சிலர் மிகத்தொலைவிலிருந்து வந்திருந்தார்கள். பல்கலைக்கழகத்தில் நடைபெறுவதால் தரமானதாக இருக்கும் என்ற எண்ணத்தில் தான், வந்திருந்தார்கள். முடிவினில் அவர்கள், தங்களது நேரத்தை வீணடித்து விட்டோமே என நொந்துகொண்டே திரும்பினார்கள்.

அண்மையில் சர்ச்சை ஏற்படுத்திய **அரிப்படி** அரட்டை கூட நாடக வடிவம், உள்ளடக்கம் பற்றிய ஓர் ஆரோக்கியமான கருத்து மோதலுக்கு இட்டுச் செல்லும் என்று எதிர்பார்த்த போதும், அது நாடகத்தை முதன்மைப்படுத்தாது சில தனிப்பட்டவர்களின் 'மேதாவித்தனத்தையும்' முதன்மையையும் நிலை நாட்டவே பயன்படுத்தப்பட்டமை, மிகவும் கவலைப்பட வேண்டிய நிலையாகும்.

அண்மையில் பல்கலைக்கழகத்தில் ஓவியசிற்பக் கண்காட்சியொன்றும் நடைபெற்றது. கலை வளர வேண்டும் என்ற நோக்கம் வரவேற்கப்படவேண்டியதே. ஆயினும், அங்கு முதன்மைப்படுத்தப்படும் கலைக்கோட்பாடுகளும் கலை வடிவங்களும் பிழையான கருத்துக்களை ஏற்படுத்தி விடாதபடி பார்த்துக் கொள்வது, பல்கலைக்கழகத்தின் பொறுப்பு; குறிப்பாக நுண்கலைப்பீடத்தின் பொறுப்பு. இந்தப் பொறுப்பு எவ்வளவு தூரம் கருத்திலெடுக்கப்பட்டதென்பது கேள்விக்குரியதே!

தனிப்பட்டவர்களை முதன்மைப்படுத்துவதற்காக அவர்களது கருத்துக்களை ஏற்றுக் கொள்வது, நியாயப்படுத்தப்பட முடியாதது. ஆனால் பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரையில், தனிமனிதர்களை முதன்மைப்படுத்தும் முயற்சிகள், பல நடைபெற்று வருகின்றன. இவை ஒருபோதும் எமது சமூக வளர்ச்சிக்கு வழிகாட்டாது. சீரிய சிந்தனையையும் நேரிய பாதையினையும் வகுத்துக் கொடுக்க வேண்டிய நிலையிலுள்ள பல்கலைக்கழகப் புத்திஜீவிகள், தங்கள் பொறுப்புக்களில் பாராமுகம் கொண்டிருப்பது, வேதனைக்குரிய ஒரு விடயமாகும்.

வருங்காலங்களிலாவது, பல்கலைக்கழகம் தனது பங்களிப்பைச் சரிவரச் செய்யவேண்டும். □

# சிந்தனை மேடை

கடந்த 2-6-89, 14-7-89 திகதிகளில் வெளியாகியிருந்த திசையின் சிந்தனைமேடையில் உயர் வகுப்பு மாணவர்க்கும் பாடசாலைக்கும் இடையிலான இடைவெளியின் விரிந்த, குறுகிய நிலைகள்பற்றி இருவர் தமது கருத்துக்களைத் தெரிவித்திருந்தனர்.

இவர்களின் கட்டுரைகளிலுள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுவதே இக் கட்டுரையின் நோக்கம்.

## தவறான விளக்கம்

''உயர்வகுப்பு மாணவர்களுக்கு பாடசாலை ஒரு தொந்தரவா?'' என்ற கேள்விக்கு ''பாடசாலை அவசியமே'' என 14-7-89 திசையின் சிந்தனை மேடையில் பதிலளித்திருந்த மா. குகரூபன் அவர்கள் கேள்விக்கு பதிலைத் தந்துள்ளாரே தவிர முன்னைய கட்டுரையாளரின் கருத்தை விளங்கிக் கொள்ளத் தவறிவிட்டார். ''சித்தார்த்தன் அவர்கள் தன் கேள்விக்கு விடைகாண முடியாமல் திணறி வாசகர்களையும் திணறடித்துள்ளார்'' எனத் தனக்கேற்பட்ட நிலையை அவர் குறிப்பிட்டுள்ளார். சித்தார்த்தன் அவர்கள், ''தனியார்கல்வி நிலையங்களிலுள்ள சுதந்திரங்கள், விரிவுரைகள் மாதிரியிலான கற்பித்தல் கொண்ட உயர்கல்லூரிகள் அரசால் அமைக்கப்பட வேண்டும்'' எனக் கோருகிறாரே அல்லாமல் குகரூபன் அவர்கள் விளங்கிக் கொண்டதன்படி தனியார் கல்விநிலையங்களின் சேவையே உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு போதுமானது என்று (குகரூபன் அவர்களின் கருத்துக்கள் தனியார் கல்வி நிலைய நடைமுறைகளோடு ஒப்பிட்டுப் பெறப்பட்

**யதார்த்தன்**

டிருந்தன) குறிப்பிடவில்லை. பாடசாலைகளோடு ஒப்பிடுகையில் மாணவர்களுக்கு அதிக உரிமையும், சுதந்திரமும் தனியார் கல்வி நிலையங்களில் கிடைக்கிறது. மாணவர்களும் அதையே விரும்புகின்றனர். ஆகவே அத்தகைய ஒரு கல்வி அமைப்பு அவசியம் என்பதே முன்னையவரின் – கட்டுரை சுட்டும் இலக்கு. (சித்தார்த்தன் அவர்களின் எல்லைக்குள்).

## குறையுள்ள கருத்துக்கள்

சித்தார்த்தன் அவர்களின் கருத்துக்கள் நடைமுறைக் கல்விக் கொள்கையைப் பின்பற்றுகின்ற, அவரது எல்லைக்குட்பட்ட எல்லாமாணவர்களின் கருத்துக்களைக்கூடப் பிரதிபலிக்கவில்லை. குகரூபன் அவர்களின் கருத்துக்கள் மாணவர்களின் உரிமைகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதாக இல்லை. அவரது கட்டுரையும் பாடசாலைக்கல்விக்கும், தனியார் கல்வி நிலையக் கல்விக்கும் இடையிலான வேறுபாடுகளை சுட்டிக் காட்டி ஒரு முடிவுக்கு வந்துவிடுகிறது. மொத்தத்தில் இருவரின் கருத்துக்களும் அவர்களின் ஒரேதன்மை கொண்ட வாழ்க்கைச் சூழலில் நிலவும் இரு முரண்பட்ட கருத்து நிலைகளையே வெளிக்காட்டியுள்ளன. இந்த முரண்பட்ட கருத்துக்களும் கொண்டுள்ள குறைகளை கீழ்வரும் தலைப்புக்களில் காண்போம்.

## 1. ஒழுங்கு விதிகள்

''பாடசாலை ஒழுங்குவிதிகளை மாணவர்கள் தேவையற்றதாகவோ, எரிச்சலூட்டுவதாகவோ கருதுகின்றனர்'' என்று சித்தார்த்தன் அவர்கள் குறிப்பிட்டிருப்பது மாணவர்களின் ஒடுக்கு முறைக்குப் பழகிப்போன மனநிலையைக் காட்டுவதாகவே உள்ளது. சித்தார்த்தன் அவர்களும் இதை மேலோட்டமாக, சொகுசுத் தேவைகருதிய பார்வையாகப் பார்ப்பதால் மாணவர்களின் மேற்படி மனோநிலைக்கான மெய்க்காரணத்தை அறியத் தவறி விடுகிறார். உண்மையில் இந்த மனோநிலை தங்கள் உரிமைகளை பாடசாலை ஒழுங்கு விதிகள் கட்டுப்படுத்தி உள்ளன என்பதை அவர்கள் உணராததாலேயே ஏற்படுகிறது. பாடசாலை ஒழுங்கு விதிகள் அவர்களை சிறுவயது முதலே கட்டுப்படுத்தி வருகின்றன. இதனால் ஒரு நிலைக்குப்பின்னரும் கூட அவர்கள் அதற்கு உடன்பட்டு விடுகிறார்கள். (குகரூபன் அவர்கள் உடன்பட்டதுபோல்) உடன்படாத விடத்தும் அதற்கெதிராகக் குரல் எழுப்பினால் தாம் பாடசாலை நிர்வாகத்தால் தண்டிக்கப்படுவோம். பாடசாலையிலிருந்து விலக்கப்படுவோம். தமது கல்வி பாழாகும் என்ற சுயநல நோக்கங்களால் எரிச்சலை உமிழ்ந்து கொண்டு காலத்தை ஓட்டுகிறார்கள். இன்றைய மாணவர்கள் பாடசாலை ஒழுங்கு விதிகளுக்கு உடன்பட்டிருப்பது இத்தகைய அறியாமையினாலும், சுயநலம் செறிந்த பயத்தினாலும் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். இந்த நிலை தொடர்வதை வெறுக்கும் மாணவர்கள், தமக்கு எரிச்சலூட்டுவதான (சித்தார்த்தன் அவர்களின் கருத்துப்படி) ஒழுங்கு விதிகளைச் சுட்டிக் காட்டி அவற்றிடமிருந்தான தமது விடுதலையைக்கோருவது எந்தவிதத்திலும் தவறாகாது. காலங்காலமாக ஒரு சூத்திரத் தன்மையோடு பாடசாலைகள் இயங்குவதற்கு காலங்காலமாக வந்துபோகும் மாணவர்களின் எதிர்ப்பின்றிய ஒத்துழைப்பே, காரணம். தமது உரிமைகளைப் பெற மாணவர்கள்தான் குரல் எழுப்பவேண்டுமே தவிர சித்தார்த்தன் அவர்கள் குறிப்பிடுவதுபோல் சமூகங்களும், அரசுகளும் செய்துதரும் என எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் இன்றைய முதலாளித்துவ அரசும் சமூக அமைப்புகளும் தமது நலன்களுக்குப் பாதகமான நிகழ்வுகள் நிகழாதவரை எந்த ஒரு மாறுதலையும் நிகழ்த்தப் போவதில்லை.

## 2. பாடசாலை நேரம்

பாடசாலை நேரம் தொடர்பாக குகரூபன் அவர்கள் குறிப்பிடும்போது ''......அதிர்ஷ்டவசமாக எமது தமிழ்ப்பகுதியில் அநேகமான மாணவர்கட்கு கல்வியே முக்கியமாக உள்ளது. மாணவப் பராயத்தில் அவர்கள் உழைக்கவேண்டிய நிர்ப்பந்தம் இல்லை. இந்நிலையில் அவர்கள் தமது முழு நேரத்தையும் பாடசாலையிற் செலவிடுவதிற் தவறென்ன?'' என்று கேட்கிறார். ''அநேகமாக'' என்ற சொல்லின் மூலம் அவர் தப்பிக்க முயன்றாலும், அநேக மாணவர்களின் நலனைக் கவனத்தில் கொண்ட தீர்வை எட்ட விரும்புவது, அத்தகைய ''அநேக மாணவர்களை''க் கொண்ட தனது வர்க்க நலனில் அவர்காட்டும் அக்கறையையே காட்டுகிறது.

எனக்குத் தெரிந்த ஒரு உயர்தர வகுப்பு மாணவர் யாழ்ப்பாணத்தில் குறித்த கல்வி அமைப்பு ஒன்றின் ஆய்வு கூடத்தின் இரவுநேரக் காவலராகப் பணியாற்றிக்கொண்டு, பகல்வேளையில் கல்வியைத் தொடர்ந்து கொண்டுமிருந்தார். இவ்வேலைமூலமான சம்பாத்தியமே அவரது கல்விச் செலவையும் இதர செலவையும் ஈடுசெய்தது. இன்னுமொருவர், வகுப்புநேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களை வயல்வேலை செய்வதிலேயேசெலவிட்டார். இவரின் குடும்பம் பெரிதாக இருந்தமையாலும், கல்வியைத் தொடரவேண்டிய தேவை இருந்தமையாலும் இவ்வாறு உழைத்தார். கல்விச் செலவுக்காக வீட்டில் பணம் கேட்கும் ஒவ்வொரு தடவையும் ஒரு யுத்தமே அங்கு நிகழ்ந்து விடுவதாக கூறுவார். இவர்களைப் போல் இன்னும் எவ்வளவோ மாணவர்கள் இதனிலும் மோசமான நிலையில் இருப்பது திரு. குகரூபன் போன்றோருக்குத் தெரிய வர்க்க வரம்புகள் விடுவதில்லை. இவர்கள் இவர்களாகவே இருக்க ''அதிர்ஷ்டவசமான அநேகர்'' அநேகராகவே இருக்கத்தான் இன்றைய கல்வி முறையும் விரும்புகிறது.

## 3. சீருடை

''சீருடை ஏற்படுத்தப்பட்டதன் நோக்கம் மாணவர்கள் அனைவரும் குடும்பப்பின்னணி, சாதி, மத, வேறுபாடுகள் இன்றி ஒரேமாதிரியாக இருக்கவேண்டும் என்பதற்காகவே'' என குகரூபன் அவர்கள் குறிப்பிடுகிறார். அதாவது, ஒரு மாணவன் மற்றைய மாணவனின் குடும்பநிலை, சாதி, மதம் ஆகியவற்றைப் பாடசாலையில் படிக்கும் போது அறிந்துவிடக்கூடாது; மாணவர் என்று கூடியிருக்கும் தம்மத்தியிலுள்ள முரண்பட்ட நிலைகளை அவர்கள் அறிந்து விடக்கூடாது; அறிந்து விட்டால் இவற்றைப் போக்குவதற்கான சிந்தனைகளில் அவர்கள் அடிப்படையிலிருந்தே ஈடுபட்டு விடுவார்கள்; அதன் மூலம் ஒரு சமூக மாற்றம் சாத்தியப்பட்டு விடும்; ஆகவே அதை முளையிலேயே கிள்ளவேண்டும்; அதற்குச் சீருடைதான் முறையான ஆயுதம். சமூகமாற்றத்தை விரும்பாதவர்கள்

(10ஆம் பக்கம் பார்க்க)

# பெண்விடுதலை —

## கருத்துக்களும் முரண்பாடுகளும்

இக்கட்டுரை, 28-7-89 திசை இதழில் பெண் விடுதலை தொடர்பாக வெளிவந்த கட்டுரையில் காணப்பட்ட தவருன கருத்துக்களுக்கு விளக்கமளிக்கும் வகையிலும், மற்றும் பெண்விடுதலை பற்றிய சில கருத்துக்களை எடுத்து விளக்கும் வகையிலும் எழுதப்பட்டுள்ளது.

பொதுவாக இன்று பத்திரிகைகள் உட்பட பல்வேறு தொடர்பு சாதனங்களும், பெண்கள் தொடர்பான விடயங்களை முன்வைப்பதில் முன்னணியில் திகழ்கின்றன. காலமாற்றத்திற்கேற்ப நமதுசமூக, கலாசார சூழ்நிலைகளும் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்வது தவிர்க்கமுடியாததாகும். இந்தவகையில் இன்று பெண்விடுதலை, பெண்ணிலைவாதம், பெண்களும் அபிவிருத்தியும் என்ற பதப்பிரயோகங்களை சகல மட்டங்களிலுமுள்ள வாசகர்கள் அறியக்கூடிய வகையில் தொடர்புசாதனங்கள் வெளிப்படுத்துகின்றமை பாராட்டப்படக்கூடிய விடயமாகும். மேற்கூறிய பதபபிரயோகங்களில் முன்னணியில் நிற்பது பெண்விடுதலை என்ற பதமே.

பெண்விடுதலை பற்றிய தெளிவின்மை என்பது இன்று உயர்கல்வி நிறுவனங்களுக்கேயுரித்தான ஒரு பார்வையல்ல. பொதுவாக உலகம் முழுவதும் இன்று இது தொடர்பான சர்ச்சைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது இவ்வாதப்பிரதிவாதங்கள் ஒருபுறமிருக்க, இச்சர்ச்சையை மேலும் விரிவுபடுத்தும் வகையில் இன்று பெண்விடுதலைககான அணுகுமுறையானது தோற்றம்பெற்றுள்ளது. பெண் விடுதலை பற்றிய கருத்து ஒரு தேச விடுதலைப் போராட்டத்திற்குச் சமானமுடையதாக—கோஷங்கள் அளவில் மட்டும் – சிலரால் நோக்கப்படுகின்றது. அதாவது ஒரு பெண்விடுதலை அடைந்துவிட்டால், அக்குடும்பத்தில் சமத்துவத்துடன்கூடிய ஒரு வளர்ச்சி ஏற்படும்; இது பின்னர் சமூக சமத்துவமாக வளர்ச்சியடைந்து இறுதியில் சமுதாயம் முழுவதிலும் ஒரு அபிவிருத்தி நிலையினை ஏற்படுத்திவிடும் என்ற கருத்தின் அடிப்படையில் தான், இப்பதபபிரயோகத்தைக் கையாள்கிறார்கள்.

ஆனல் இக்கருத்து எவ்வாருன நிலையில் ஏற்றுக்கொள்ளப்பட முடியும்என்பதிலேயே, இன்று கருத்து முரண்பாடு எமமவர் மத்தியில் ஏற்படுகின்றது. உண்மையில் பெண்விடுதலை என்பது இவர்கள் கருதுவதுபோல ஆண்களுக்கெதிரான ஒரு இயக்கமாகவோ, அன்றேல் பெண்கள் பற்றிய மரபுரீதியான சில சமூக நோக்கிற்கு எதிராகவோ செயற்படுவதன் மூலம்தான் அடைந்துகொள்ளப்பட முடியும் என்று கருதுவது, தவருனவாகும். இக்கருத்தே இன்று பெண்விடுதலைக்கெதிரான ஒரு சூழ்நிலையையே தோற்றுவித்துக் கொண்டிருக்கின்றது. ஆகவே பெண்ணிலைவாதிகளே தான் தமது விடுதலை பற்றிய ஒருபக்க நோக்கினூடாக, சமூகத்தில் அதனை ஒன்று சர்ச்சைக்குரிய விடயமாக்கி விட்டார்கள்.

பொதுவாக பெண்விடுதலை என்பது ஒரு முழுநிலையிலிருந்து நோக்கப்பட வேண்டிய தொன்று அதாவது பொருளாதார ரீதியாக, சமூக ரீதியாக தங்கியிருத்தல் நிலைக்குப் புறம்பான ஒரு செயற்பாட்டையே குறிக்கின்றது. வருமானம், தொழில நிலைமை, பிறருக்கு அடிமையாகாது இருத்

கே. கே. பத்மாஷினி

தல் (இது ஆணுக்குமட்டுமல்ல, பெண்ணினத்திற்குளளேயும் இல்லாதிருத்தல் வேண்டும்) என்ற பல்வேறு நிலைகளிலும் சுயசார்பு நிலையினை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். வ்வாறு செய்வதற்கு ஒரு பெண் தனது பணிகளிலிருந்தோ அல்லது குடும்பத்திலிருந்தோ அந்நியப்படுவதன்மூலம்தான் விடுதலையை ஏற்படுத்திவிடலாம் என்று கருதுவதும் தவறு. இவற்றினைப் புரிந்துணர்வின் அடிப்படையில் இருபாலாரும் செய்ய முற்படும் போதுதான் சமுதாயம் முன்னேற்றமடைய முடியும்.

மேலும், பெண்கள் வேறு துறைகளில் — முக்கியமாக தொழில்கள் அல்லது சமூகப் பணிகளில் — சுதந்திரமாகச் செயற்படுவதற்கு தற்றுணிபை ஏற்படுததிக் கொள்ளவேண்டுமேயொழிய, இது ஆண்களால் வழங்கப்படக்கூடியதல்ல. சில பதவிகளைச் சில பெண்கள் பொறுப்பேற்பதற்கு முன்வருவதில்லை. உதாரணமாக இன்று இயங்குகின்ற அரசாங்க சார்பற்ற நிறுவனங்களில் பெண்களைத் தலைவராக அல்லது செயலாளராக, அலலது ஒரு நிர்வாகக்குழு அங்கத்தவர்களாகக் கூட நியமிகக முறபடும் போது அப்பெண்கள் இப்பதவிகள் தமக்குச் சுமையுடையன என்றும், இதனைக் கொண்டு நடாத்துவது தங்களால் இயலாத செயல் என்றும் எனமும்கூறிக்கொண்டு, இவற்றிலிருந்து ஒதுங்குகின்றார்கள். இதே போல சில தொழிற்றுறைகளைப் புதிதாக ஆரம்பிக்கவோ, அல்லது கணவன் இறந்துவிட்டால் தொடர்ந்து அத்துறையை இயக்கவோ பெண்கள் முன்வருவது குறைவு. மேற்கூறிய உதாரணங்கள் பெண்கள் துணிவின்மை உடையவர்களாகவும், அதேநேரம் பொறுப்புக்களைத் தவிர்த்துக் கொள்ள விரும்புகின்றார்கள் என்பதையுமே எடுத்துக்காட்டுகின்றது.

இவ்விடயத்தில் 28-7-1989 திசை இதழில் பெண் விடுதலை தொடர்பாக வெளியாகிய கட்டுரை தொடர்பாக எழுந்த சந்தேகங்களைக் குறிப்பிடவேண்டியது அவசியமாகின்றது. இதில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப் பீடத்தில் துறைத்தலைவர்களாக பெண்கள் எவரும் இல்லை என்பதும். அதே நேரம் தலைவராக இருப்பதற்கான தகுதி விதியாக பல்கலைக்கழக மாணவர்களின் தொகையை வீதாசார ரீதியாக எடுத்துவிளக்கியமையும், கவனத்திற் கொள்ளப்பட வேண்டியவையாகும். இவ்விளக்கமானது சில தெளிவின்மைகள் காரணமாகத் தோன்றியிருக்கின்றது. பொதுவாக துறைததலைவர் பதவி என்பது எழுமாருகக் கிடைக்கப் பெறுவதலல இது சேவையாற்றிய காலம், கல்வித்தரம் என்பவற்றுக்கேற்பவே வழங்கப்படுகின்றது. அதனடிப்படையில் இன்று துறைத்தலைவர் பதவிகளை ஏற்கக்கூடிய வகையில் கலைப்பீடததில் தற்போதுள்ள தலைவர்களை விட ஏதேனும் ஒரு வகையில் இங்குள்ள பெண்கள் குறைவாகத்தான் இருக்கின்ருர்கள். எனவே நிலைமை இவ்வாறு இருக்கும் போது பெண்கள் பாரபட்சம் காட்டப்படுகின்ருர்கள் என்பதற்கு உதாரணமாக இதனை எடுத்து விளக்கியமை, தவருனதாகும். இத்துடன் மேலதிக விளக்கத்திற்காக அண்மையில் நிகழ்ந்த, நிகழ்ந்து கொண்டிருக்கின்ற இரண்டு சம்பவங்களை எடுத்துக் கூறுவது சிறந்தது. அண்மையில் ஒரு துறைத்தலைவர் (இவர் பேராசிரியரும் கூட) வெளிநாடு சென்றிருந்தபோது அக்காலத்தில், ஏறக்குறைய ஒரு வருடம், துறைத்தலைவராகக் கடமையாற்றியவர் ஒரு பெண்ணே இப்பதவி மேற்கூறிய தகுதிவிதிகளின் படியே வழங்கப்பட்டது. அடுத்து இன்று கலைத்துறையின் இன்னுமொரு துறையில் (அதுவும் பல்கலைக்கழகப் புகுமுக மாணவர்கள் அனைவரும் இத்துறைக்கூடாகவே தமது புகுமுகப் படிப்பை ஆரம்பிக்கின்ருர்கள்) இன்னமும் ஒரு பெண்ணே தலைவியாக இருக்கிருர். ஆகவே உண்மை நிலைமை இவ்வாறு இருக்கும் போது பெண்கள் இங்கு உயர்பதவிகளில் இல்லை என்றே, அல்லது பாரபட்சம் காட்டப்படுகின்ருர்கள் என்றே ஒரு முடிவுக்கு வருவது தவருனதாகும். அத்துடன் ஒரு உயர்கல்வி நிறுவனத்தின் நிர்வாக விடயங்களை வெளியுலகிற்கு எடுத்துக்காட்டும் போது அது நன்கு ஆராயப்பட்டு, ஆதாரபூர்வமாக நிருபிக்கப்படல் வேண்டும். இல்லையேல் இவ்வகை ஸ்தாபனங்களைப் பற்றிப் பல்வேறு மட்டத்தில் உள்ளவர்களுக்கும் தவருன அபிப்பிராயத்தை வழங்குவதாகவே அமையும்.

இவை தவிர, பெண்கள் விடுதலையுடன் தொடர்பாக வேறு சில கருத்துக்களையும் கூறவேண்டும். நடைமுறையில் அவதானிக்கப்படக் கூடிய சில செயல்களும், பெண்ணை அடிமையாக்குவதற்கே வழிகோலுகின்றது. உதாரணமாக பஸ்ஸில் பிரயாணம் செய்யும் போது "பாவம் பெண்" என்று ஒரு ஆண் தனது ஆசனத்தை விட்டுக் கொடுக்க வேண்டும் என, பல பெண்கள் எதிர்பார்க்கிருர்கள். இதே போல பல்வேறு தொழில் ஸ்தாபனங்களில் "பாவம் பெண்" என்ற கருணை நிலை காட்டப்பட்டு, அதன் மூலம் அவர்களுக்கு விடுதலை அளிக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றது. முக்கியமாக அரசாங்க அலுவலகங்களில் வெளிக்கள ஆய்வு வேலைகளின்போது இவ்வாருன நிலைமை அவதானிக்கப்படுகின்றது. இவ்வாருன நிலைமைகளைப் பல பெண்கள் வரவேற்கின்ருர்கள். உண்மையில் இந்த நிலைமையானது, அதாவது 'பாவம் பெண்' என்ற நோக்கானது ஒரு வகையில் பெண்கள் பலவீனமானவர்கள் என்பதையே எடுத்துக் காட்டுகின்றது. எனவே இவ்வகையில் பெறப்படுகின்ற பெண்விடுதலை ஏற்றுக்கொள்ளக்கூடியதா? இது மீண்டும் பெண்ணடிமை என்பதற்கே இட்டுச் செல்கிறது.




எவ்வாறெனினும் பெண் விடுதலை என்பது தனியே ஒரு பக்க விடுதலையாக மட்டும் அமையாது, பொருளாதார நிலையிலும் அடையப்படும் போதே ஒரு முழு அளவிலான விடுதலையாகக் கணிப்பிடப்படும். இந்நிலைமையை ஏற்படுத்துவதற்கு நீண்டகாலம் எடுப்பினும் கூட, உண்மையில் ஒரு சமுதாயத்திற்க அல்லது நாட்டிற்கோ அபிவிருத்தியை ஏற்படுத்த வேண்டுமெனில், பெண்களும் தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதன் மூலமே குடும்பவளர்ச்சியை ஏற்படுத்தி, இறுதியாக நாட்டில் முழு அபிவிருத்தி நிலையை ஏற்படுத்த முடியும். இவ்வாருன ஒரு முயற்சியைத் தனித்து ஒரு பெண் செய்ய முடியாத விடத்து, இன்றுள்ள பெண்கள் தொடர்பான அமைப்புக்களேனும் இதனைச் செய்து உதவுவதற்கு முன்வரவேண்டும்.

விடுதலை வேண்டி நிற்கின்ற பெண்கள், முக்கியமாக சமுதாயத்தின் கீழ் மட்டததில் உள்ள பெண்கள், இவ்வமைப்புக்களிருந்து எதிர்பார்ப்பது, இவ்வாருன உதவிகளையே ஒழிய, ஆண்களுக்கெதிரான போராட்ட வழிகாட்டல்களை அல்ல இதனை இன்றுள்ள சகல பெண் அமைப்புக்களும் ஏற்றுக்கொள்ளும் போதே பெண் சுதந்திரம் எனபது நிலை நிறுத்தப்படும். □

# ஆண்களின் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும்

எமது பகுதிகளிலிருந்து வெளிவரும் சில பத்திரிகைகளில் பெண்ணிலைவாதம், பெண் உரிமை, பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்கப் பல இயக்கங்கள் — அமைப்புகள் தோற்றுவிக்கப்படவேண்டும் என்ற கருத்துக்களை உள்ளடக்கிய கட்டுரைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன். உலக அரங்கிலேயும் பல பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் இவ்வாருன கருத்துக்களைப் பிரதிபலிக்கும் கட்டுரைகள் பலவற்றையும் சிறுகதைகளையும், நாவல்களையும் கூடப் பிரசுரித்து வருகின்றன.

□ அரசடி பூ. நவம் □

அண்மைக்காலப் புள்ளிவிபர மதிப்பீடுகளின்படி கி.பி. 2000 ஆவது ஆண்டில் பெருகிவரும் உலக சனத்தொகையில் ஆண்களைவிடப் பெண்களே அதிகமாக இருப்பார்கள் என்றும் அறிவிக்கபபட்டுள்ளது. கல்வி அறிவில் பெண்கள் காட்டி வருகின்ற ஊக்கமும், அவ் ஊக்கத்தினுல் ஏற்பட்ட சிந்தனைகளும், இன்று புற்றீசல் போல் பெருகிவரும் அவர்களது சனத்தொகையும், ஆண் இனத்திடம் தாங்கள் அடிமைப்பட்டிருப்பது போன்ற ஒரு பிரமையை அவர்களிடையே ஏற்படுத்தி வருகிறது. இதன் காரணமாக ஆண்களுடன் பெண்களும் சரிசமமாக நடத்தபபட வேண்டுமென்ற கோஷங்களும், அடிமைத்தளையைக் களைந்தெறிய வேண்டுமென்ற போராட்டங்களும், அவர்களால் கிளப்பப்பட்டு வருகின்றன.

பெண்களால் தோற்றுவிக்கப்படும் அமைப்புகள் பெரும்பாலும், ஆண்களே தங்களின் முதலாவது எதிரி என்ற வகையிலே செயற்பட்டு வருகின்றன. அணுகுமுறை கடைத்தெறியப்பட வேண்டுமென்றும், ஆண்களுக்கு அடிமைகளாக வாழும் பெண்கள் அவர்களிடமிருந்து விடுதலை பெற வேண்டுமென்றும், அவ்வமைப்புகள் பிரச்சாரம் செய்து வருகின்றன. ஆண்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளைப் பகிரங்கப்படுத்த பலமுனைணிப் பத்திரிகைகளையும், கருத்தரங்கு, பட்டிமன்றம் போன்றவற்றையும் பயன்படுத்தி வருகின்றன இப்படியான அணுகுமுறை சமுதாயத்தில் பெரும்பாலும் அவர்களுக்கு வெற்றியளித்து வருவதாகவே புலப்படுகிறது.

விஞ்ஞான ரீதியிலான அணுகு முறையற்ற பெண்களின் இக்கருத்துக்கள், எதிர்காலத்தில் ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே ஒரு புரிந்துணர்வற்ற தனமையை ஏற்படுத்துவதோடு, அவர்களின் சுபீட்சமான வாழ்வுக்கும் குந்தகமாகவே அமைந்து விடும். சமூக, பொருளாதார, அரசியல் ரீதியில் ஆண்களுக்கெதிராக பெண்கள் செயற்படத்

(11ஆம் பக்கம் பார்க்க)

கலைச்சாரல்

# வைரமுத்துவின் அரங்கம்

## ஒரு அறிமுகம்

வைரமுத்து என்ற நடிகமணி காலமாகிவிட்டார். "நடிகமணி" என்ற அந்த அவைக்காற்று கலைஞர், அவைக்கு ஆற்றிய பணியினை மதிப்பீடு செய்வது அவசியம். அத்தகையதொரு மதிப்பீடு மிகவிரைவில் துறைசார் அறிஞர்களால் மேற்கொள்ளப்பட வேண்டும்என்பதனையும், இங்கு வலியுறுத்த விரும்புகிறேன். இங்கு அஞ்சலி நோக்கில் அமைந்த ஒரு அறிமுகமே மேற்கொள்ளப்படுகிறது அக் கலைஞர் அவைக்காற்றுபவராக இருந்தமையாலும், அரங்கம் அவரது அடிப்படைச் சாதனமாக அமைந்தமையாலும், அவரது அரங்கம் பற்றிய அறிமுகத்தைச் செய்ய முற்படுவது பொருத்தமாக இருக்கும்.

வைரமுத்து ஆடிவந்த அரங்கம், மரபு வழி வந்த இசை நாடக அரங்கமாகும். அது மரபு வழி வந்த கூத்தரங்கல்ல. அது தமிழகத்தினூடாக வந்த "பார்சி நாடக மரபின்" வழிவந்த இசை நாடகவரங்கமாகும். அவ்வரங்கம் எவ்வாறு "வைரமுத்துவின் அரங்கம்" ஆனது? அது அவ்வாறு ஆனமை, அதனை அவ்வாறு ஆக்கிக் கொண்டமை, வைரமுத்து என்ற நடிகரின் மேதாவிலாசமாகிறது. ஒருவர் தான் மட்டும் திறமையுள்ளவராக இருந்து விட்டுப் போனால் போதாது; அவர் இருந்து காரியமாற்றி விட்டுச் சென்ற துறை, அவருக்குப் பின்னர், அவர் பணியால் செழுமை பெற்றதாக அமைந்திருக்க வேண்டும். இந்த வகையிலும் வைரமுத்துவின் பணி கருத்திற் கொள்ளப்படவேண்டிய ஒன்றாகும்.

வைரமுத்துவின் அரங்க நடவடிக்கைகளை மதிப்பீடு செய்வதன் மூலம், நாம் மிகவும் வறுமைப்பட்டு நிற்கும் எமது நாடக அரங்க வரலாற்றுப் பதிவுகளுக்குச், சிறிய அளவிலேனும் தகவல்களைத் தொகுக்கமுடியும். நாடகவரலாற்றை அரங்க வரலாறு எனக் காட்டுவது தவறு. நாடக எழுத்துப் பிரதியை முழுமைப் படுத்த உதவும் நடிப்பு, வேடஉடுப்பு, ஒப்பனை, காட்சியமைப்பு, செயல், பேச்சு, இசை, நடனம், ஒளியமைப்பு, நெறியாளுகை போன்ற ஏனைய அரங்கக் கலைகள் பற்றிய தகவல்களை நாம் தவறவிட்டு விடுகிறோம். இவ்வனைத்து அரங்கக் கலைகளின் இசைவால் விளையும் கூட்டுக் கலைப் புக் கலையாக அமைவதிலேயே அரங்கின் செழுமையும் தாக்கமும் தங்கியுள்ளது. அதனாலேயே அரங்கம் வாழ்வை ஒத்த கலையாக அமைந்து விடுகிறது.

அரங்கில் நிகழ்த்தப்படும் யாவும் திரும்ப நிகழ்த்தப்படுபவையாகும். இருப்பினும் அந்நிகழ்வுகள் அனைத்தும் நிகழ்த்தப்படும் கணத்திலேயே உண்மையில் நிகழ்பவை போன்று பார்வையாளருக்குத் தோன்றும். வாழ்வை ஒத்த அனுபவங்கள், வாழும் மனிதரால் அரங்கில் வியாக்கியானம் செய்யப்படுவதால், வாழ்வைப் போன்றே அரங்க நிகழ்வுகளும், நிகழும் கணத்திலேயே அழிந்தும் போகின்றன. பார்வையாளரின் நெஞ்சங்களில் எஞ்சி நிற்கும் நினைவுகளில் மட்டுமே அவ்வரங்க நிகழ்வுகள் வாழும். எனவே தான் "நடிகமணி"யாக மேடையில் வாழ்ந்து, மனித அனுபவங்களை வியாக்கியானம் செய்த அந்தக் கலைஞரின் பணிகள், கற்பனைகளாகிக் கட்டுக் கதைகளாக மாறுவதற்கு முன்னர், மதிப்பீடு செய்யப்பட வேண்டிய ஒன்றுகவுள்ளது.

அரங்காகவே கொள்ள முடியும். இசை நாடக அரங்கின் வரலாறும் அவ்வாறே அமைந்துள்ளது. நாடகம் என்பது நடிகனின் கலை என்பதில் ஐயமில்லை. நடிகனை மையமாகக் கொண்டே அனைத்து அரங்கக் கலைகளும்தொழிற்படுகின்றன. உலகநாடக அரங்குகள் அனைத்தும், நடிகனின் அரங்குகளாகவே பெரும்பாலும் இருந்து வந்துள்ளன. வெவ்வேறுகாலப் பகுதிகளில் நெறியாளுகை,

அரங்கக்கலை வாழ்வை மிக வொத்ததாகவுள்ள ஒரு கலையாக இருப்பினும், அது பொருத்தமற்ற விபரங்களைக் களைந்தெறிந்து, காத்திரமானவற்றையும், தொடர்புறு பண்புகளையும், உண்மைகளையும், இணைத்துத் தொகுத்து, அழகிய கோலங்களை வடிவமைப்பதாக இருப்பதால் வாழ்விலிருந்து வேறுபட்டதாக இருக்கிறது இதனால், ஒரு அரங்க நிழ்வு மனித அனுபவத்துக்கு ஒப்பீடு ஆவதாகவும், அதனை வியாக்கியானம் செய்வதாகவும் நின்று விடாது, மனித

காட்சியமைப்பு, ஒளியூட்டல் என்பன அரங்கில் முதன்மை பெற்றிருந்த வேளையிலும், நடிகர் முதன்மை பெற்றுவந்துள்ளனர். இந்த வகையிலேயே வைரமுத்துவும் தனது பல்வகைப்பட்ட திறமைகளால் இசைநாடக அரங்கில் முதன்மை பெற்றுவிட்டார்.

பாடத் தெரிந்தவருக்குத் தான் இவ்வரங்கு பணி பிடைபுரியும். இசையே அவ்வரங்கின அடிப்படை ஊடகம். கருநாடக இசையே அவ்விசையின் அடிப்படை. கருநாடக



'அரிச்சந்திர மயான காண்டத்'தின் 2000ஆவது மேடையேற்ற கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் நிகழ்ந்தவேளை (25-4-1972), பேராசிரியர் சு. வித்தியானந்தன் 'கலைக்கோமான்' பட்டத்தினை வைரமுத்துவுக்குச் சூட்டுகிறார்.

அனுபவத்தைச் சிருஷ்டிக்கவும் வேண்டும் அதாவது, மனித அனுபவத்தைக் கலை வழங்குவதாக இருப்பினும், கலை அனுபவம் என்பது வாழ்க்கை அனுபவம் போன்றதல்ல. வாழ்க்கை அனுபவத்தில் நாம் தன்வயமாக நின்று விடுவதுண்டு; அரங்கில் கலை அனுபவத்தைப் பெறுகின்ற பார்வையாளர் புறவயமாக நின்று நோக்கும் உரிமையினைப் பெற்றுள்ளனர். இந்த உரிமையினை வைரமுத்துவின் அரங்குளந்த

இசை வரலாற்றில், அவ்விசை இரு கிளைகளாகப் பிரிந்து வளர்ந்து வந்துள்ளது ஒன்று, அமைதியாக மேடையில் அமர்ந்திருந்து சிறியதொரு ரசிகர் கூட்டத்தினருக்காக இசைக் கச்சேரி நிகழ்த்தும் மரபாக வளர்ந்தது; இது இருப்போர் கூட இசையரங்காக அமைந்தது. மற்றையது, பாட்டும் நடிப்பும் பல்வேறு அரங்கக் கலைகளும் இணைந்து, பல்லாயிரக் கணக்கான மக்களுக்காக ஆற்றப்படும் இசை

**குழந்தை ம. சண்முகலிங்கம்**

எவுக்குப் பார்வையாளருக்கு வழங்கியது என நோக்குவதன மூலம் அவ்வரங்கின அழகியல் பணியினையும், கலைப் பணியினையும் மதிப்பீடு செய்ய முடியும். அவ்வாறு நோக்கமுற்படும் போது, முதற்கண் வைரமுத்துவை ஒரு நடிகராக அவதானிப்பதவசியம்.

வைரமுத்துவின் அரங்கினை அடிப்படையில் நடிகனின்

நாடக மரபாக வளர்ந்தது; இது மக்கள் நயக்கும் அரங்காக (Popular Theatre) அமைந்தது. இவ்விரு பிரிவுகளும் ஒன்று மற்றையதோடு கொண்டும் கொடுத்தும் உறவாடி வந்துள்ளன.

ஆகவே, இசையில் மட்டும் வல்லவராக வைரமுத்து இருந்திருப்பாராயின்அவர் இவ்வரங்கைத் தனதாக்கிக் கொண்டிருக்கமுடியாது. இசைவல்லமை நிரம்பப் பெற்ற வைரமுத்து, சிறந்த நடிப்பாற்றல் உள்ளவராகவும் இருந்தார். அவர் கருநாடக இசையை அரங்குக் கேற்ற இசையாக்கினர். நடிப்பினை அவ்விசைக்கேற்றதாக ஆக்கிக்கொண்டார். நடிப்பால் இசையின் பரிமாணத்தையும், இசையால் நடிப்பின் பரிமாணத்தையும் அகட்டிக் கொண்டார் இரண்டையும் திறம்பட இணைத்து ஒன்று மற்றையதன் வளர்ச்சிக்கு உதவுமாறு செய்தார். இவரது இவ்வாற்றலை மதிப்பீடு செய்வதற்கு நிறையச் சான்றுகள் உள்ளன. உள்ள ஒளிப்பதிவு நாடாக்கள் அதற்கு இனிமேல் உதவும்.

அரங்குக்கு வருகின்ற பார்வையாளர், அங்கு மேடையில் நிகழ்வருப்பதனைத்தும் உண்மையில் அக்கணத்தில் நிகழ்பவை அல்ல என்பதையும், அவை யாவும் என்றோ எப்பொழுதோ யாரோ ஒருவருக்கு அல்லது ஒரு சிலருக்கு நிகழ்ந்தவை என்பதையும், அவை மீள்படைப்புச் செய்யப்படுகின்றன என்பதையும், அவ்வாறு செய்வதற்காக நடிகர், தம்மை அச்சலராகப் பாவித்து நிகழ்த்திக் கொண்டிருக்கும் "ஒரு சடங்கே" அங்கு நடைபெறுகிறது என்பதையும் நன்கு அறிந்தவராகவே அங்குவருகின்றனர். இருப்பினும் அவர்கள் அங்கு நிகழவிருக்கும் யாவையும் நிஜமென நம்பப் போகின்றவர் போன்றே வருகின்றனர் பார்வையாளர் அரங்னுள் பிரவேசிக்கும் போது "நம்பாமை எனும் மனப்போக்கினைத் தாமே விரும்பி அரங்கவாயிலில் தற்காலிகமாகக் களைந்து வைத்துவிட்டு" வருகின்றனர். இந்த இரண்டு முரண்நிலைப் பட்ட மனநிலையில் இருக்கும் பார்வையாளரை, அவற்றுக்கிடையே ஒரு சமநிலையைக் காணவைத்து, அரங்கில் தொடர்ந்து இருக்கவைக்கின்ற நடிகரே தனது கலையில் வெற்றி கண்டவராகின்றார். இவை இரண்டுக்குமிடையிலான சமநிலை பாதிக்கப்படும் வேளையில் பார்வையாளர், அரங்கில் நிகழும் எதையுமே நம்பாதவராக மிகத்தூரத்தே சென்றுவிடுவர், அல்லது, அரங்கில் நிகழும் அனைத்தோடும் இரண்டறக் கலந்தும் எதையும் சிந்திக்க முடியாதவராகிவிடுவர் உணர்வும் சிந்தனையும் ஒன்றுக்கொன்று துணைபுரியும் மனநிலையில் பார்வையாளரை வைத்திருப்பது நடிகரின் பணியாகிறது. பார்வையாளர் மிகச் சேய்மையில் சென்று விடாதவாறும், மிக அண்மையில் வந்துவிடாதவாறும் பார்த்துக் கொள்வது நடிகரின் வேலை. பார்வையாளரை இத்தகையதொரு மிதமான தொலைவில் வைத்திருந்தலே அரங்கில், "அழகியல் தொலைவு" (Aesthetic distance) எனப்படுகிறது. வைரமுத்துவின் நடிப்பு முறைமைகள்— அவர் பல முறைமைகளைத் தனது நடிப்பில் இணைத்திருந்தார் — பார்வையாளரை மிதமான அழகியல் தொலைவில் இருக்க உதவின. அவர்கள் அந்த நிலையில் இருந்து கொண்டு ரசானுபவத்தை, அழகியல் அனுபவத்தைப் பெற்றனர். அரிச்சந்திர மயானகாண்டத்தின் இறுதிக் கட்டத்தில் பார்வையாளர் அரிஸ்டோட்டல் கூறிய "கத்தார்சிசையும்" (Catharcis) வைரமுத்துவால் பெற்றனர். அந்த அனுபவ நிறைவு தந்த அமைதியில் ஆழ்ந்தனர். இங்கு நடிகனின் கலை வைரமுத்துவில் பிரகாசிப்பதை நாம் காணலாம்.

மேற்கண்டவாறு மனித அனுபவத்தைப் பார்வையாளருக்கு அளிப்பதில் வெற்றிகண்ட வைரமுத்து, அவ்வெற்றியின் மூலம், தொடர்பியல் சாதனமாகவும் அரங்கு பணிபுரியத் துணைநின்றார். வைரமுத்துவின் அரங்கு பார்வையாளரை நான்காவது சுவராக வைத்திருந்ததா, அல்லது கோதாவின் அருகிருந்து பார்ப்பவராக வைத்திருந்ததா என்று நோக்குமிடத்து, அவரது அரங்கு இவற்றைவிடக் கூடுதலானதொரு அந்தஸ்தினையே தனது பார்வையாளருக்கு வழங்கியது. நடிகரும் பார்வையாளருமே அரங்கின் இரு பிரதான மூலங்கள் என்பதை வைரமுத்து உணர்ந்திருந்தாரெனத் தெரிகிறது. அவரது தயாரிப்புகள், நடிப்பு முறைமைகள் என்பன வேறுபட்ட பார்வையாளரின் தன்மைக்கேற்ப அமைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

அரங்கு, செயல்களின் அரங்காக இருப்பது நல்லதா அல்லது சொற்களின் அரங்காக இருப்பது நல்லதா என்றதொரு வினாவும் உண்டு. செயல்களின் மூலம் கருத்துக்கள் ஆழமாகவும் தெளிவாகவும் பரிவர்த்தனை செய்யப்படுவது பயனுடையதாகும். இந்தவகையில் நோக்குமிடத்து வைரமுத்துவின் அரங்கம் இசையோடு இணைந்த சொற்களோடு இசைந்த, அழகிய செயல்கள் நிறைந்த அரங்காகவே இருந்தது. அவ்வரங்கில் சொற்கள் செயல்களை நெறிப்படுத்துவனவாகவும், செயல்கள் சொற்களுக்கு வலுவைக் கொடுப்பனவாகவும் இருப்பதைக் காணலாம்.

வைரமுத்து தனது நீண்ட கால நடிப்பு அனுபவத்தினூடாக, மேடை அசைவுகளையும், சைகைகளையும், நிலைகளையும், நாட்டியத்துக்குரிய தன்மையோடு, மோடிப்படுத்தி வளர்த்தெடுத்தமையை, அவரது நடிப்பிலும் அவரோடு நீண்டகாலம் இணைந்து நடித்தவர் நடிப்பிலும் காணக்கூடியதாக உள்ளது. குறித்த சில கருத்துக்களை வெளிப்படுத்த அவர் குறிப்பிட்ட சில சைகைகளை முத்திரை போலப் பயன்படுத்தி வந்தார்.

(அடுத்தவாரத்தில் முடியும்)

## நேற்றைய இரவு

நேற்றய இரவில் தூக்கம் கலைந்து
சிறுநீர் கழிக்க மீள எழுந்தேன்.
சந்தடியின்றி கதவைத் திறந்தேன்.
கதவின் இடுக்கினூடு இருளைத் துழாவினேன்.
காற்றின் ஒவ்வொரு அசைவிலும் கூட
காலன் வருவதாய்ப் பிரமையடைநதேன்.

நாயகளின் நிசப்தத்தில் நம்பிக்கையுற்று
துணிந்து மெல்ல வெளியே வருகையில்
இறக்கையை அடித்துச் சேவல் கூவ
இதயம் ஒருமுறை உறைந்து மீண்டது.

சிறிய வயதுகளில் பயந்து நடுங்கிய
பேயின் கதைகளேனோ ஞாபகம் வந்தன.
கூரிய பற்களும் நகஙகளும் இழந்து
இரும்புக்குழாய்களுடன் அவை
உலவுகின்ற பீதியில்
ஓசைப்படாமல் சிறுநீர் கழித்தேன்.

திரும்பி நடக்கையில் துவக்கு முனைகள்
முதுகைநோக்கி நீள்வதாய் நினைத்து
உடல் சிலிர்கக உள்ளே நுழைநதேன்.

சிறுநீர் கழித்து முடிந்ததும் சிறுகணம்
நீடித்திருக்கும் நிம்மதி மூச்சல்,
குளிர் நிலவில் வேம்பின் முன்றிலில்
ஏகாந்தமாய் அன்று ஓர்நாள்
புகைபிடித்தபடி உலகையத்தை நினைத்தேன்.
அந்த இரவுகள் மீண்டும் வருமா?

— எஸ். ஞானசேகர்

## தூவானம்

- ரகசியமாக ஒரு சந்திப்பு!
- ''1970 இன் பின் எழுத்தாளனே இல்லை!''

யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபை நூலகங்களும், சன சமூக நிலையங்களும் ஈழத்து நூல்கள், சஞ்சிகைகளின் ஒவ்வொரு பிரதியை வாங்க வேண்டுமென்று கோரி, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சு. டிவகலாலா வெளியிட்ட அறிக்கை பற்றி 'தூவானத்'தில் (1-7-89) குறிப்பிட்டிருந்தேன் அல்லவா?

இரண்டு கிழமைகளின் முன்னர் ஈழத்து நூல்கள், சஞ்சிகைகள் கொள்வனவு தொடர்பான சந்திப்பொன்று, யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்றிருக்கிறது. செயற்பாடு நோக்கிய நகர்விற்கு தூவானமும் காரணம் என்பது, சொல்லாமலே புரியும். இச் சந்திப்பில் சு. டிவகலாலாவுடன் 'யாழ். இலக்கிய வட்டத்'தைச் சேர்ந்த இருவரும், தெல்லிப்பழை 'கலை இலக்கியக் களத்'தைச்சேர்ந்த இருவரும், 'மல்லிகை' ஆசிரியரும் மட்டும் கலந்து கொண்டுள்ளனர். இதனை ஒழுங்கு செய்தவர்கள் யாரென்று தெரியவில்லை. எனினும், ஒரு சிலருக்கிடையில் 'மூடுமந்திரம்போல்' இவ்வாறு நடத்துவது தவறென்பதைச் சுட்டிக்காட்டுவது எமது கடமை.

யாழ். மாவட்டத்திலிருந்து தாயகம், அலை, புதுசு, நான், உள்ளம், ஜீவசக்தி, ஆகிய சஞ்சிகைகளும் வெளிவருகின்றன. தேசியகலை இலக்கியப்பேரவை, முத்தமிழ் வெளியீட்டுக் கழகம், அலை வெளியீடு, தமிழியல், யதார்த்தா, சுயம் வெளியீடு, ஆகிய நிறுவனங்கள் பல நூல்களை வெளியிட்டுள்ளன. தனியாக நூல் வெளியீடு செய்த / செய்யக்கூடிய எழுத்தாளர்கள் பலரும் இருக்கிறார்கள். பொது நோக்கிலான திட்டமொன்றைப் பரிசீலித்து முடிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கும்போது, சம்பந்தப்பட்ட பலசரப்பினரும் தவறாது அழைக்கப்படவே வேண்டும். மாற்றுக்கருத்துள்ளவர், வேண்டாதவர், தங்களுக்குச் சங்கடந் தருபவர் எனச் சிலரை ஒதுக்கிவைப்பது ஈழத்து இலக்கிய உலகில் புற்றுநோய்போல் பரவி வருகிறது. பரந்த நோக்கம் கொண்டவர்

### நீலாம்பரன்

போல் பாவனை காட்டியபடி, ஆனால் ரகசியமாக அதற்கு மாறாக, 'வயதில் முதிர்ந்த' சில எழுத்தாளர்கள் செயற்பட்டு வருகின்றனர். இத்தகையவர்களின் 'குறுகிய மனோபாவங்களிற்குள்' சிக்குப்படாது ஆணையாளர் செயற்பட வேண்டுமென, எதிர்பார்க்கிறோம்.

இதே சந்திப்பில் ஒரு எழுத்தாளர், 70ஆம் ஆண்டுக்குப் பின் உருப்படியான — நல்ல எழுத்தாளர் — ஒருவரும் இலங்கையில் தோன்றவில்லையென்றும் 'திருவாய் மலர்ந்தருளி'னாராம்! சில 'கிழட்டு இலக்கியப் பூனைகள்' கண்ணைமூடிக்கொண்டு, தம்முடன் வரலாற்றின் இயக்கம் முடிந்து விட்டதாக நினைக்கின்றன! பாவம்; இதற்கெல்லாம் காரணம் தாழ்வுச் சிக்கல்தான்.

எம். எல். எம் மன்சூர், உமா வரதராஜன், ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், க. சட்டநாதன், ஸ்ரீதரன், சாந்தன், அ. யேசுராசா, நந்தினி சேவியர், சௌமினி, பூரணி, குப்பிழான் ஐ. சண்முகன், ரஞ்சகுமார், அ ரவி, அருள் சுப்பிரமணியம், பிரான்சிஸ் சேவியர், மாத்தளை வடிவேலன், மலரன்பன் லெ முருகபூபதி போன்றோர் தம்மளவில் வெவ்வேறு பரிமாணங்களை வெளிப்படுத்திய எழுபதுக்குப் பிந்திய — நல்ல எழுத்தாளர்கள். இன்னும் சிலரையும் இதில் சேர்த்துக் கொள்ளமுடியும்.

இன்னுமொரு விடயம், ஐம்பதுகளின் பிற்கூற்றிலும், அறுபதுகளின் முற்கூற்றிலும் எழுதிய சில எழுத்தாளருக்கு, வேறு சிலர் எழுதிக்கொடுத்தோ, பெருமளவு திருத்திக் கொடுத்தோ உதவியதான குற்றச்சாட்டுக்களும் இருக்கின்றன; சிலர் அத்தகைய கதைகளுக்குப் 'பரிசு'களும் பெற்றுள்ளனர்! 70ஆம் ஆண்டிற்குப் பிற்பட்ட எந்த நல்ல எழுத்தாளரும் இவ்வாறான குற்றச் சாட்டுக்கு உள்ளாகவில்லை யென்பதும், விசேடமாய்க் குறிப்பிடத்தக்கதாகும். □

# ஸ்ரீதரனின் 'சொர்க்கம்'

## இன்னொரு பார்வை

இன்று ஈழத்தில், அரசியலிலும், சமூக — பொருளாதார — கலை — கலாசாரங்களிலும் புதிய கோணத்தில் தரிசனம் தரும் மாத — வார வெளியீடுகள் பல வெளிவருகின்றன. அவற்றுள், தமிழிலும் ஒரிரு வெளியீடுகள் உள்ளன. அந்தஒரிரு வெளியீடுகளில், அண்மையில் வெளிவரத் தொடங்கிய திசையும் ஒன்றாகும்.

'திசை'— வெறுமனே புதினப் பத்திரிகையாக இருந்து, உள்ளூர் — வெளியூர்ச் செய்திகளை மட்டுந் தருவதாக இல்லாது, காத்திரமான — கனதியான கலை — இலக்கியப் படைப்புகளையும், திட்டமிட்டு இலக்கிய ஆர்வலர்களுக்கும், சுவைஞர்களுக்கும் தருவது மிகவும் போற்றுதற்குரியதாகும். சாதாரணமாக, ஈழத்து — குறிப்பாக யாழ்ப்பாணத்து வார மாத வெளியீடுகள் போலல்லாது, புதிய கண்ணோட்டத்தில் — தேசிய பார்வையில், ஒரு புதிய வடிவமைப்பில் — ஓர் இதழாக 'திசை' வெளிவருகிறது என்பதே என்போன்றோரின் கருத்தாகும்.

இதற்கோர் எடுத்துக்காட்டாக, 'திசை' யில் (முகம் 21—26 வரை) ஸ்ரீதரன் எழுதிய ''சொர்க்கம்'' என்ற குறுநாவலை மட்டும், ஒரு படைப்பாளி என்பதிலும் ஒரு தினசரி வாசகன் என்ற முறையில் எமது படைப்பாளிகள், பிரதேச நோக்கில் தமது படைப்புகளைத் தந்த காலத்தில், இக் குறுநாவலும் எழுதப்பட்டிருக்கிறது. இங்கு 'பிரதேச நோக்கு' எனும்போது குறிப்பாக — எமது படைப்பாளிகள், தமது பிரதேச மண்ணை மணந்து எழுதினர்கள் என்பதையே குறிக்கிறேன். இந்நிலையில், ஸ்ரீதரன் போன்றோர், தேசிய நோக்கில் — மனித நேயத் தளத்தில் நின்று — சாதி, சமய, பிரதேச அவலங்களுக்கு அப்பால் நின்று, தமது படைப்புகளைத் தந்தார்கள். அந்த வகையில் படைக்கப்பெற்ற ''சொர்க்கம்'' படைப்பிலக்கியத்தில், ஒரு தனியிடத்தை வகித்து நிற்கிறது. பொதுவாக, நம்மவர் காணும் சாதிப்பிரச்சினை — சீதனப் பிரச்சினை குடும்பப்பிரச்சினை போன்ற நாளாந்த நடைமுறைக் கோலங்களில் இருந்து விலகி, இக்கதையின் கரு மனிதத்துவக் கோல அவலங்களை — அதற்கேற்ற சூழ்நிலைக் கோலங்களில் நின்று உருக்கொண்டிருக்கிறது.

கதை நடத்துதலில், இக் கதை ஒரு சிறு கதையா? குறுநாவலா? எனக் கூறமுடியாது போயினும், அதனுரு ஆறு வாரங்களுக்கு, ஒன்பது அத்தியாயங்களில் நகர்த்தப்பட்டிருக்கிறது பொதுவாக குறுநாவல்களில் எதிர்பார்க்கப்படும் வருணனைகள் சுவாரசியங்கள் — சோடனைகள் — பெருமளவு இதில் இல்லாவிட்டாலும், இதன் கதையோட்டமும் அழுத்தமும் கனதியும் சிறப்பாக அமைந்திருக்கின்றன.

இருப்பினும் —

கதை சொல்லும் பாணி(Naration) யில் ஆரம்பம் முதல் முடிவு வரை ஓர் இனம் தெரியாத மலைப்பும் தெளிவின்மையும் இக்கதையில் இருப்பதைச் சுட்ட வேண்டியேயிருக்கிறது. இதற்குக் காரணம் - (எனது நோககில்) - ஆசிரியர் தனது

**அநு. வை. நாகராஜன்**

அபரிமிதமான குறியீட்டு (Symbolic) நடையைக் கையாண்டதால் ஏற்பட்டிருக்கலாம் எனத் தோன்றுகிறது. இந்த இடத்தில், இவர் தனது நடையை மிளிரச் செய்ய எடுத்த உத்தியாக இதனைக் கொண்டாலும், அதனூடாக எத்தனை வாசகர்கள் இவருடைய எண்ணக்கருவைப் புரிந்து கொண்டார்கள் என்பதை இங்கு குறிப்பிட விழைகிறேன்.

'திசை'யின் குறிப்புப்படி, இக்குறுநாவல் 1978 இல் எழுதப்பட்டிருக்கிறது. (இது 'திசை'க்கு முன் எங்காவது வெளிவந்ததோ தெரியாது) அதாவது. ஈழத்தமிழர் வாழ்வில் இன நெருக்கடி உச்சமடையாத கால கட்டத்தில் இது எழுதப்பட்டிருக்கிறது. எழுபதுகளில் பெரும்பாலான நாம் முதலில், தெரிந்தாக வேண்டும்.

உதாரணத்துக்கு, இவரது குறியீட்டு நடையில் ஒரிரு வரிகளை இங்கு பார்க்கலாம். ''.....சாதியைப் போக்காட்டுகிற வேலையொன்று செய்திருக்கிறான் என்றால், அன்னாசி என்று யாவரும செல்லப் பெயரிட்டு அழைக்கிற அலிஸ்நோனாவுடன் குடும்பம் நடத்துவதை இது குறிக்கும். விட்டு விட்டு நடத்துவதைக் குறிக்க வினைச்சொல் வருமட்டும் நடத்துவது என்றே சொல்லிக் கொள்ள வேண்டும்.'' (அத். 01) '' ...இந்த வயதில் உள்ள அநேக தனிக் கட்டைகள் போல் இடைக்கிடை இரட்டைக் கட்டையாகிறதும் உண்டு. அலிஸ் நோனா இதற்குதவி—உதவி மட்டும் தான்.'' (அத். 01) ''.......டேவிட்டுக்கு இன்னும் கனவுகள் ஏதும் தொடங்கவில்லை. எப்போதும் தொடங்காது போலிருக்கிறது.'' (அத். 03)

வாசகர் எல்லோரும் புத்திஜீவிகள் அல்ல— கதைப் பித்தர்களுமல்லர். கதையோட்டத்தில் சிலவேளை இந்த ஊமங்கள் ஊமையாகி விட்டால்— தெளிவற்று நின்றால், நடைக்கு மவுசு குறைந்து போகும் என்பதே எனது கருத்து.

இருந்தும், யாழ். வாசகர்களுக்கு முற்றிலும் அந்நியமான பகைப்புல தரிசனம் ஒன்று இக் கதையில் கிடைக்கிறது என்பதைக் கொண்டு மகிழ்வோம்.

கொழும்பில் ஒரு சேரிக் குப்பத்தில் மனித ஜீவன்கள் என்று கூறப்படும் ஆறறிவு படைத்த மானுடப் பிண்டங்கள் சந்தர்ப்பச் சூழ்நிலைகளாலும் 'இதுதான் வாழ்வு' என்று கண்ட மேதாவிலாசத்தாலும் எத்தகைய வாழ்வில் வாழ்கின்றன என்ற காட்சியை ஆசிரியர் இங்கு தருகிறார் மூன்று வித்தியாசமான குணநலன்களைக் கொண்ட, ஆனால் ஒரு விடயத்தில் மட்டும் ஒற்றுமை கொண்ட மூன்று ஜீவன்களைச் சுற்றிச் சுற்றிக் கதை நகர்த்தப்படுகிறது. இதில் வரும் அலிஸ் நோனாவிலும் பாதிரியாரே கதையின் ஜீவனைத் தூக்கிப் பிடித்து, அதன் கனதியை இறுக்கி நிற்கிறார். கதையில், பாதிரியார் காணும் 'சொர்க்கத்துக்கும்' செவுத்தி —எசக்கி —கரீம் என்போர் காணும் 'சொர்க்கத்துக்கும்' பல கிலோ மீற்றர் தூரம் இருக்கிறது. அவர் காணும்'சொர்க்கம்' கற்பனை கடந்த சொர்க்கம்—இவர்கள் காணும்'சொர்க்கம்' நடைமுறையில் நிதர்சனமான சொர்க்கம். இது தான், கதையின் உள்ளீடு எனக் கருதுகிறேன்,

கதையிற் சோடிக்கப்படும் பகைப்புலச் சோடனைகள் இரண்டொரு இடங்களில் மிகவும் நேர்த்தியாகவும், அந்த வேளையில் நிதர்சனமாகவும் இருக்கின்றன. குறிப்

(11ஆம் பக்கம் பார்க்க)

## திசையின் சிறுகதை

# கேள்விகள் உருவாகின்றன

### தேசியஇனப் பிரச்சினைக் கதை — 9

நந்தி ஈழத்தின் மூத்த எழுத்தாளர்களில் ஒருவர். அவரின் வைத்தியத்துறை அனுபவங்கள், வித்தியாசமான பார்வைகளைத் தமது படைப்புகளில் வெளிப்படுத்த அவருக்கு உதவியுள்ளன.

மலைக்கொழுந்து, தங்கச்சியம்மா ஆகிய நாவல்களும்; குரங்குகள் நாடகமும்; ஊர் நம்புமா?, கண்களுக்கு அப்பால் ஆகிய சிறுகதைத் தொகுப்புகளும் நூல் வடிவில் வெளிவந்துள்ளன.

வைத்திய அறிவு நூல்களைத் தமிழில் எழுதி, வெளியிடுவதிலும் சிறப்பான பணியினை இவர் ஆற்றியிருக்கிறார்.

மினிவான் யாழ்ப்பாண ஆரியகுளத்துச் சந்திக்கு வந்தபோது, ஒரு பையன் ஓடிவந்து தொத்தி அதில் ஏறி, சிவப்பிரகாசம் மாஸ்ரருக்குப் பக்கத்தில் அமர்ந்தான். அவன் இராப் பயணம் செய்தவன் போல, கண்கள் சிவந்து பொருமினதாகவும் முகம் உரோமமும் எண்ணெயுமாகவும் தோன்றினான்: ஏதோ நோக்கம் நிறைந்த அவன் பார்வையும், அப்பி வைத்தது போன்ற கொழுத்த மூக்கும், காத்திரமான மீசையும் அவன் இளமைக்குத் தீவிரம் திட்ட, மாஸ்ரர் அவனைச் செவ்வையாகவும் சாடையாகவும் பார்த்துப் பார்த்து விகற்பமான பலவித யோசனைகளால் மனம் சோரலானார். அவன் தனது முழங்கால்களில் சிவப்புக்கோடுகளிட்ட ஒரு வெள்ளைக் கன்வஸ் பையை இருத்திக் கெட்டியாகப் பிடித்திருந்தான்.

'அதற்குள் என்ன வைத்திருக்கிறானோ மாபாவி? நேரம் பிசகிய வேளையில் அந்தச் சிறுபைக் கருவி பஸ்ஸை போர்த் தேங்காயெனச் சிதறடித்து, என்னையும் மற்றப் பிரயாணிகளையும் பிண்டம் துண்டுகளாக அகாலமாக .. படைத்தவன் மடியில்!' . ... ...

வீரமாகாளி அம்மன் கோவில் வாசல் முன் இந்த வான் தரித்தது; கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்த விதமான கதைதான். சிவப்பிரகாசம் மாஸ்ரர் வணக்கத்துடன் சால்வையை விலக்கி, பவித்திரமாக இதய பீடத்தைத் தொட்டு, உணர்விழந்த குரலில் 'அம்மா' என்று பிச்சை கேட்டார். மற்ற வேளைகளில் இத்தகைய கருமம் சாதாரண சம்பிரதாயம்தான்; இன்று அது அர்த்தமுள்ள அவசியமானது. அதுகும் வேண்டியது உயிர்ப் பிச்சை! அவருக்கு வேறு எந்த விதமான பிச்சையும் எதற்கு?

இடைக்காடு கிராமப் பாடசாலை ஒன்றில் பல வருடங்களாக ஆசிரியர் என இருந்த அவர், மூன்று வருடங்களுக்கு முன் பென்சன் பெற்றார். பாடசாலை ஆட்சிக் காலத்தில் அவர் பையன்களை 'அடக்கி ஆண்டதாக' சொல்லுவார்; வகுப்பறையிலே கண்ணயர்ந்தவன், கொட்டாவி விட்டவன், முணுமுணுத்தவன், அனுங்கியவன், சொறிந்தவன், சோகித்தவன். அங்கே சிறிதேனும் தாமதமாக வந்தவன் — இன்னும் அவர் மனத்தில் படும் ஒழுக்க விருப்பு வெறுப்புகளுக்கு ஒவ்வாத எந்த அசைவு நெளிவுகளையோ செய்தவன், அவரது ஏச்சுக்கும், அடிக்கும், வெளியேற்றலுக்கும் ஆளானவன்; குட்டுக்கும், நுள்ளுதலுக்கும், உதைக்கும் கூட குறைவில்லை மாணவரின் செய்கைக்குக் காரணம் கேட்க, ஏன், யோசிக்கக்கூட, மாஸ்ரர் எந்தக் காலத்திலும் எத்தனித்ததில்லை. ஏன், எதற்கு எதனால், எப்போது — என்ற வினாக்களுக்கு அவர் அகத்திலும் அகராதியிலும் இடமே கிடையாது. பையன்களும் அடங்கிப் போனதுண்டு. அதுவே அவருக்கு நிம்மதியையும் மனத் திருப்தியையும் தந்தது. அப்படியானவருக்கு இப்போது 'பொடியன்கள்' என்றால் அந்த வார்த்தையே அலர்ஜி: கேட்டதும் அவர் உடல் உதறும்.

'கெட்டுப் போனான்கள்,'

அத்தனைக்கும் அவருக்கு மூன்று பையன்கள்; ஆசைக்கு ஒரு மகள் இல்லை. ஒரு பெட்டை மட்டும் இருந்திருந்தால்— லண்டனில் ஒரு வீடு, 30,000 பவுண் சீதனம், 5000 டினர் டொனேஷன், 10,000 டொலர் நகை என்று தமையன் தம்பிமாரைச் சாட்டிச் சீதனம் பேசித் தனது சர்வதேசப் பெறுமதிக்கு ஒருசார் விளம்பரம் விடுத்திருக்க மாட்டாரா?

மூத்தவன் 74–ஆம் ஆண்டு, பெண் கொடுக்க ஓவசியர் மாமனைத் திருப்தி செய்வதற்காக, இங்கிலாந்துக்கு அறுவை மருத்துவம் பயிலச் சென்று மூன்றும் தடவையும் ஆரம்ப எஃப். ஆர் சீ. எஸ். பரீட்சை ஒத்து வராது போகவே, ஜீரி

நந்தி □□

யாற்றிக்ஸ் என்ற கிழடுகள் மருத்துவமே மகேஸ்வரன் காட்டிய சேவை என்று எப்போது கையை வைத்தானோ, அவனுக்கு அடித்தது யோகம் — இலங்கையின் செலவாணி மொழியில் கோடீஸ்வரன்! நடுவிலான் பரந்தன் இரசாயன சாலையில் தொழில் நுட்ப உதவியாளனாக இருந்தவன். 1977 இனக் கலவரத்தை வைத்து நாட்டின் எதிர் காலத்தை எடைபோட்டதன் விளைவாக, ஓமான் போய், அங்கே ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் 'ரூம் போய்:' நமது நாட்டின் அதி உயர் அரசாங்க அதிகாரிகளின் ஒரு மாத ஊதியத்தை மூன்றே மூன்று நாட்களில் உழைக்கின்றான். கடைசிப் பையன் வேலையற்றவன், 'விடுகாலி' 'கழிசறை' என்று ஊரில் பெயர் பெற்றவன், 1983 கலவரத்தின் வாய்ப்பாக ஜேர்மனிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு அகதிப் பணம் பெறுகின்றான்: அவனுக்குச் சம்பளம் 3,000 ரூபா என்று தாய் பெருமைப் படுவா. ஆகவே இந்த மூவரையும் தவிர, 'உலகத்தில் மற்றப் பையன்கள் கெட்டுப் போனான்கள்' என்று மாஸ்ரர் வசை கூற, அவர் மனைவி ஆமோதிப்பாள்.

நாட்டின் எதிர் காலம் சூனியத்தை நோக்குவதற்கு மட்டுமல்ல, தனது சொந்த வாழ்வின் இன்னல்களுக்கெல்லாம் இவன்கள்தான் காரணர் என்பது மாஸ்ரரின் தீர்ப்பு. எவ்வளவு வசதிக் குறைவுகள்: மாத இறுதியில் பென்சன் பணம் வாங்க கியூவில் நிற்க வேண்டும், தபால் கந்தோரிலே வான் கடிதம் கிடைப்பதில்லை, கொழும்புக் குளிர்பானம் வருவதில்லை... மாஸ்ரரின் முறையீடு ஒரு நீண்ட பட்டியல்.

மினிவான் யாழ்ப்பாணத்தின் சனசஞ்சடியான பகுதிகளைக் கடந்து இருபாலை வருவதற்கிடையில், தெரு ஓரம் இருந்த கோவில்கள் எல்லாவற்றையும் மாஸ்ரர், தான் வகுத்த கிரமத்தில், 'அப்பு' 'அம்மா' எனத்தொழுது கொண்டு போனார் அவன் எந்தக் கோவிலையும் கவனிக்கவில்லை: வானின் முன் கண்ணாடி ஊடாக நேரே வெறித்துப் பார்த்தவாறு புலப்படாத எதையோ குடைந்து கொண்டிருந்தான்.

'இது நல்லதற்கல்ல' — மாஸ்ரர் கிரகித்தார். 'கோவிலைப் புறக்கணிப்பவன் —தெய்வத்தில் நம்பிக்கை இல்லாதவன் — உலக நடத்தைக்கு அடங்காதவன் —அவன் எதையும் செய்யத் துணிவான். இப்படியான தருக்கவாதம் மனத்தைப் பலவீனப் படுத்த, அவனுடன் சினேகித வேஷம் போடுவதுதான் தற்போதைய சாதுரியம் என்று மாஸ்ரர் தீர்மானித்தார். அவர் கேட்டார், 'தம்பி, கொழும்பில் இருந்தா வருகிறீர் ?'

'ஓம்'

'றயிலிலா'? இப்போது றயில் வடக்குப் பக்கம்பார்த்து வருவதில்லை என்று அவருக்குத் தெரியும்; 'ஓம்' என்ற ஒரே சொல்லான பதிலைத் தவிர்க்கக் கேட்ட கேள்வி இது.

'இல்லை'

□ □

மாஸ்ரர் இடைக்காட்டில் ஒரு சா வீட்டிற்குப் போய்க் கொண்டிருக்கிறார். போஸ்ற் மாஸ்ரர் (பி. எம்.) சரவணபவனின் மனைவியார் இறந்து போனா. அன்று காலைதான் பத்திரிகையில் பார்த்தார். ஈமக்கிரியைகள் காலை பதினொரு மணி அளவில்.

'உம். ஒரு மணி செல்லும்.' பென்சன் எடுத்தபின் அவர் இடைக்காட்டுக்குப் போகவில்லை, ஆனைக்கோட்டையில் தங்கி விட்டார்.

'செத்தவீட்டில் பல சினேகிதரைச் சந்திக்கலாம் அவர்களின் பிள்ளைகளும் வெளிநாடுகளில் இருக்கிறார்கள். விசா, பாஸ் போட், குடியுரிமை பிரச்சினைகள் என்றும், வெளிநாட்டுப் பணத்தின் பெறுமதி, மக்களின் மேல்விலாசங்கள், பேரப்பிள்ளைகளின் படிப்பு — இப்படியான புளுகுகள் என்றும் ஆராயவும் அருட்டவும் அதிகம் இருந்தது.

மன்செஸ்ரரில் ஒரு நீர்வேலிப் பெட்டை இருக்கிறாள், என்ஜினியர் தமையனுடன் பத்து வருஷமாக. நிரந்தர அந்தஸ்துடன், ஏதோ வேலையாக. போன கிழமை அவளின் போட்டோவும் குறிப்பும் வந்தன. போட்டோவில் அவள் பொது நிறம், ஓவர் கோட் போட்டிருந்ததாலோ என்னவோ சற்றுக் கனமாகத் தோன்றினாள். ரேவதி நட்சத்திரம், வெளிநாட்டுச் சீவியம், 'அவள், நடுவிலானுக்கு...ஓமானில் இருந்து இங்கிலாந்து போவது சுலபமாம்.'

நீர்வேலியில் ஒரு ரியூஷன் கொட்டிலில் இருந்து ஒரு கூட்டம் பெண்பிள்ளைகள், பூப்பு வயதினர், ஆரவாரித்து வானில் ஏறி நிற்க இடம் பிடித்தார்கள். அவர்களில் ஒருத்தி முகத்திலே செவ்வழகு செல்லமாகத் தவழ, மிதமான தேக வனப்பும் வளர்ச்சியுமாகத் தோன்றியவள், இந்தப் பையன் பக்கத்தில் அவனுடன் ஒட்டாத குறையாக மிக நெருக்கமாக நின்று, தனது கையிலிருந்த அடுக்குப் புத்தகங்களைத் தனது கைப்பாரம் குறைப்பதற்காக இவனிடம் உரிமையுடன் கொடுத்தாள். எந்த விதமான அறிமுகமும் பிணைக்காமல் — ஒரு சம்பிரதாயப் புன்சிரிப்பு? அதுகூட இல்லை.

'இவன் என்ன அண்ணனா? அத்தானா ? ஓ! தலைவனோ? அக்கம் பக்க உணர்வே இல்லாது இருக்கும் முரட்டு இளைஞனைச் சுமுகமாக ஏற்றுக் கொள்ளும் இவளும்தான் யார்? இவர்கள் இந்தப் பெணகள் எல்லோரும் யார்? இது ஒரு புதிய குலம், ஒரே சாதி.' இப்போது சிவப்பிரகாசம் மாஸ்ரருக்கு இன்னொரு ஊகம் ஊர்ஜிதமாகிறது: பொடியன்கள் மட்டுமல்ல, பெட்டையள்கூட எங்கே போகிறார்கள்! கெட்டுப் போனவை?

ஒரு சிறு மழை சொரிந்து ஓய்வதுபோல் அந்தப் பெதும்பைகள் வானிலிருந்து சலசலவென இறங்கினார்கள். இவனின் இவள் கூட போய்விட்டாள். அந்தத் தரிப்பில் ஒரு ஆறேழு மாதக் கர்ப்பிணி ஏறினாள். அவளைக் கண்டதும் மாஸ்ரர், பிரசவத்தையே பார்த்தவர் போல் திடுக்கென மறுபக்கம் முகம் திருப்பி, யன்னல் ஊடாக வெளி உலகச் செய்திகளை மதில்களில் வாசித்தார்: ரியூஷன் நிலைய, மினி சினிமா விளம்பரங்கள், வீரமரணங்களுக்கு அஞ்சலிகள், போராளி இயக்கங்களின் அறிவிப்புகள்— போதைப் பொருள்கள், பதுங்கு குழிகள், பயிர்ச் செய்கை, முதல் உதவிப் பயிற்சி வெத்தியாகி. மாஸ்ரருக்கு சுழலும் உலகம் திசையை மாற்றியது போல், காலம் கிறுகிறுத்தது. மினிவானும் தெருப் பள்ளங்களில் விழுந்து குலுக்கியது.

'சே! இந்த இழிவுகளை வாசிக்காமல், எழுந்து அவளுக்கு உட்கார இடம் கொடுத்திக்கலாம்.'

அவர் திரும்பிப் பார்க்கும் போது அவன் இல்லை அந்தக் கர்ப்பிணி இருந்தாள் அவள் மடியில் சிவப்புக் கோடுகளுடைய அவனுடைய 'பை' இருந்தது.



'அவளின் எதிர்காலக் குழந்தைக்குக் காப்பாக வைத்திருக்கக் கொடுத்திருக்கிறானோ?' அவர் மனதினுள் ஏளனம் பெருமூச்சாக வெளிவந்தது.

அச்சுவேலிச் சந்தையில் வான் நின்றதும், அவளிடம் தனது பையைப் பறித்தமாதிரி வாங்கிக் கொண்டு அவன் இறங்கி விட்டான் அர்த்தமற்ற அவசரம். நிம்மதி, நிதானம், நியாயம் அறியாதவனாகத் தள்ளிக் கொண்டு எப்படித் தொத்தி ஏறினானோ, அப்படியே குதித்து மறைந்து போனான்.

(9ஆம் பக்கம் பார்க்க)



## தன்னை அறிதல்

தன்னை அறிதல் என்றால் என்ன?

சொல்கிறேன், முதலில் நீ, நான் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டும்.

சரி சொல்கிறேன், கேளுங்கள்.

உன்னுடைய ஊர் எது?

யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணத்தில் எந்த இடம்?

கந்தர்மடச் சந்தி.

சந்தியில் மேற்காலா, கிழக்காலா?

மேற்கால்.

மேற்கால் என்றால், மேற்கால் வரும் ஒழுங்கையிலா?

ஆம்.

ஒழுங்கையிலுள்ள, அந்தப் பெரிய வீடா?

இல்லை, அதற்குப் பின்னால் உள்ள சின்ன வீடு.

சரி, அப்படியானால் இப்படித்தான் தன்னை அறிதல் என்பதும் ஆரம்பிக்கப்படவேண்டும்.

தன்னை அறிதலுக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?

எப்படி உன் இருப்பிடத்தை அறிவதற்கு இந்தக் கேள்விகள் உதவினவோ, அப்படித்தான் தன்னை அறிதலுக்கும் நாம் கேட்கும் கேள்விகள் சில உன் 'இருப்பை' அறிய உதவும்.

எப்படி?

இக்கேள்விகள் மூலம் நான் எப்படி தேவையானவற்றை ஏற்றும் தேவையற்றவற்றைத் தள்ளியும் உன் இருப்பிடத்திற்கு வந்தேனோ, அவ்வாறே நாமும் நமது இருப்புப் பற்றி அறிய வேண்டும்.

சரி, அதற்குரிய கேள்விகள் என்ன?

நீ யார்? உன்னுடைய இருப்பு எது? என்பனவே அதற்குரிய கேள்விகளாகும்.

'நான் மனிதன். எனது இருப்பு மனித இருப்பு' என்பனவே அதற்குரிய எனது பதில்களாகும்.

சரி, மனிதன் என்று நீ கூறுவது எதை? உனது உடலையா? உயிரையா? மனதையா?

உடல், உயிர், மனம் மூன்றையும் சேர்த்தே நான் 'மனிதன்' என்று கூறுகிறேன்.

அப்படியானால் ஒரு சிக்கல் எழுகிறது.

என்ன சிக்கல்?

நீ உனது கனவுகள் அற்ற ஆழ்ந்த உறக்கத்தில் உனது உடல் இருப்பதை உணர்கிறாயா?

இல்லை.

உனது உயிர் இருப்பதை உணர்கிறாயா?

இல்லை.

உனது மனம் இருப்பதை உணர்கிறாயா?

இல்லை.

அப்படியானால் நீ ஒரு சூன்ய நிலையில் இருந்திருக்கிறாய்?

ஆம்.

ஆனால் நீ உனது கனவுகளற்ற அந்த ஆழ்ந்த உறக்கத்தைவிட்டு விழித்தெழுந்ததும் 'நல்ல நித்திரை கொண்டேன், சுகமாக இருக்கிறது' என்று சொல்கிறாய், இல்லையா?

ஆம்.

அப்படியானால் அந்த ஆழ்ந்த உனது உறக்கத்தை அனுபவித்தது யார்? உடல் உயிர் மனம் என்ற முக்கூட்டும் சூன்யமான அந்த நிலையில் உனது ஆழ்ந்த நித்திரையை அனுபவித்தது யார்?

தெரியாது.

அந்தத் 'தெரியாதவரை'த்தான் கண்டு பிடிக்கவேண்டும். 'அவர்'தான் நீயாக, உன் இருப்பாக இருக்கலாம். ஆழ்துயில் என்ற அனுபவம் இருக்குமானால் அதை அனுபவித்தவரும் இருக்கத்தான் வேண்டும்.

ஆனால் இது அனுபவத்துக்குச் சாத்தியப்படுமா?

எமது அறிவுக்குச் சாத்தியப்படும் ஒவ்வொன்றும் அனுபவத்துக்குச் சாத்தியப்பட்டே ஆகவேண்டும்.

எப்படி?

அதற்குத்தான் நான் கூறிய 'நான் யார்? நான் உடலா, உயிரா, மனமா?' என்ற சுயவிசாரணை ஆரம்பிக்கப்படவேண்டும். இந்த விசாரணை தீவிரம் பெறப்பெற வெளிச்செல்வதையே பழக்கமாக்கிக் கொண்ட எமது சிந்தனை உள்ளே தள்ளப்படுகிறது. வெளிச்செல்லும் எமது சிந்தனையும் நாம் வெளிவிடும் மூச்சும் ஒத்தியங்குவதால், எமது வெளிச் சிந்தனை கட்டுப்படக் கட்டுப்பட எமது வெளிப்பாயும் மூச்சும் குறுகிக் குறுகி எம்மை அறியாது உள்ளே ஸ்தம்பித்துவிடுகிறது. இது எமது சுய விசாரணைக்கு எரிபொருள் போல் தீவிரம் கொடுக்கிறது. இந்தத் தீவிரம் நிச்சயம் எமது சொந்த இருப்பின் தரிசனத்துக்கு இட்டே செல்லும். பரீட்சித்துப்பார்.

தீட்சண்யன் □

# பொல்பொட்டின் சகோதரன்

லோத் சௌங் கம்போடியாவில் 'கெமர் ரூச் கொம்யூனில் தற்போது வசித்து வருகிறார்.

1978ஆம் ஆண்டில் ஒரு நாள், அதுவரையறியாத திடுக்கிடும் செய்தியொன்றை அவர் அறிந்ததாகச் சொன்னார்.

தனக்கு 13 வயது இளையவனான தம்பி சலொத் சர்தான் இகழ்ச்சிக்குரிய கொடுமைக்காரனான பொல்பொட்—1975—1978 வரை கம்போடியாவில் தூய கொம்யூனிஸ்ற் புரட்சிக்காக என்று கூறி, கொடுமையான வழிகளில் இலட்சக்கணக்கான மக்களைக் கொன்றவன் — என்பதே அந்தச் செய்தியாகும்.

"நான் அதிர்ச்சியடைந்தேன்'' என்று 'சௌங்'பினோம் பென்னில், சமீபத்தில் நினைவு கூர்ந்தார். இவ்வளவு பெருந்தொகை மக்களைக் கொன்று நாட்டுக்குப் பெருந் துயரத்தை ஏற்படுத்த, அவனால் எப்படி முடிந்தது என்றும் வியந்தார்.

பொல்பொட் இளமையில் மிகவும் கனிவானவன் என்றும், மற்றவர்கள் செய்வதுபோல் உணவுக்காக கோழிகளைக்கூட அவன் கொல்லமாட்டான் என்றும், தாமிருவரும் இறுக்கமான பௌத்த மதச் சூழலில் வளர்க்கப்பட்டதாகவும் கூறினார். மேலும், அவனது பாதுகாவலன் என்ற முறையில் தானே அவனைப் பௌத்த பாடசாலையொன்றுக்கு அனுப்பியதாகவும், ஒரு வருடம் பௌத்த துறவியாகக்கூட அவன் இருந்துள்ளான் என்றும் சொன்னார்.

புலமைப் பரிசில் கிடைத்து பிரான்சிற்குச் சென்றபின்னரே, அங்கு கொம்யூனிஸ்ற் மாணவர்களுடன் வாழ்ந்ததில் அவனில் மாற்றம் ஏற்பட்டதாம்.

பொல்பொட்டைப் பற்றி இப்போது என்ன நினைக்கிறீர்கள்? என்று கேட்கப்பட்டபோது, அவர் சொன்னார்:

''அவனை நான் பொருட்படுத்தவில்லை!''

— கடலோடி □

# கேள்விகள்...

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

'இக்காலச் சந்ததியின் பொருத்தமானதோர் பிரதிநிதி'

நிம்மதியான மனச் சிரிப்பு. ஆறுதலாக மாஸ்ரர் இறங்கினார்.

'என்ன அவசரம்?'

'இப்போது மணி பத்தாகிறது. இடைக்காட்டுக்கு அரை மணி நேரத்தில் நடந்து போய் விடலாம்.'

பக்கத்திலிருந்த ஒரு தேநீர்க் கடைக்குப் போய், ஒரு தேநீருக்கு ஓடர் கொடுத்தார். அவர் கேட்காமலே, கடைப் பையன் வைத்த தட்டிலிருந்த வடைகளில் ஒன்றை எடுத்துக் கடித்தார்.

'பழசு'

□

சிவப்பிரகாசம் மாஸ்ரர் பி. எம். சரவணபவன் வீட்டிற்குப் போனபோது, அந்தப் பழைய நாற்சார் வீட்டின் உள் முற்றத்தில், கிரியைகள் அப்போதுதான் தொடங்கியிருந்தன. சுற்றிவர நிறையப் பெண்களும், சில இரத்த உருத்து ஆண்களும் இருந்தனர். உள்ளே இப்போது போக மாஸ்ரருக்குத் தோன்றவில்லை. அவருடன் பேசக்கூடிய சகாக்கள் வெளியே கன்வஸ் பந்தலின் கீழே தொட்டம் தொட்டமாக, வற்றிய குளத்தின் சேற்றில் கிழட்டுக் கொக்குகள் போல் வெள்ளை உடுத்து இருந்தனர். பி. எம். அவ்விடத்திற்கு வரவில்லை. ஆறு மாதங்களுக்கு முன் அவருக்குப் பக்கவாதம் ஏற்பட்டு பேச்சும் போய்விட்டது. அவரைக் கிரியை இடத்தில் ஒரு நாற்காலியில் இருத்தி வைத்திருப்பதாகப் பேசிக்கொண்டார்கள்.

மாஸ்ரருக்கு ஏமாற்றம். நினைத்ததுபோல் யாருடனும் பேச முடியவில்லை. நேரம் அப்படி, மரணமும் அப்படியானது. அந்த மரணம் சமூகத்திற்கு இன்னும் ஒரு எச்சரிப்பு; அனைவர் முகத்திலும் மரண பயம் அழுத்தியது. இரண்டு நாட்களுக்கு முன் செல்வச்சந்நிதி கோவிலில், தொண்டமனாற்று ஆமி காம்பிலிருந்து வந்த ஷெல்லுக்குப் பலியானவர்களில், இந்த மனையின் தாயும் ஒருத்தி; பாதி முகம், பாதி உடல், பாதி எல்லாம் கருகி விட்டன. அதைப் பார்க்க மாஸ்ரர் விரும்பவில்லை.

எத்தகைய நிலைமையிலும், தன்னுடன் ஒத்துவரக்கூடியவர்களை மனிதன் எப்படியோ இனங்கண்டு கொள்கிறான். மாஸ்ரர் அப்படியான ஒரு சிலர் மத்தியில் போய் உட்கார்ந்தார், சிறிது வேளை வயோதிப மௌனம் அங்கே வசதியாகச் சிந்தித்தது. அவர்களில் ஒரு ஆசிரியர், வெகு காலத்திற்கு முன்பே மாணவர்களால் 'லூஸ்' என்று பட்டம் சூட்டப்பட்டவர், சீரியஸாகச் சாற்றினார்: ''மனுஷி'' ஆமி இருப்பது தெரிந்தும், கோவிலுக்குப் போயிருக்கப்படாது'' அவர் வாய் மூடுவதற்குமுன், அதை ஒரே வார்த்தையில் ஆமோதித்தவர் சிவப்பிரகாசம்.

''பேய்த்தனம்''

....................

'கோவிலுக்கு அண்மையில் இராணுவ முகாம் இருக்கலாமா?

பொது மக்கள் மீது போர்க் குண்டுகளை எய்யலாமா?'

இப்படியான கேள்விகளைக் கேட்கப் பழக்கப்பட்டவர்கள் சிவப்பிரகாசம் மாஸ்ரர் இருந்த கூட்டத்தில் யாரும் இருக்கவில்லை.

கிரியைகள் முடிந்ததும், பெண்களின் கடைசி ஓலம் ஒலித்தது. பிரேதப் பெட்டி பெண்களின் இழுபறிக்கு இடையே மூடப்பட்டபின், சிவப்பிரகாசம் மாஸ்ரர் உள்ளே சென்று பி. எம். சரவணபவனுக்குத் தன் முகத்தைக் காட்டினார். பாடை தூக்கப்பட்டது. ஒவ்வொருவரின் செவிப்பறைகளிலே, குறுணிசயக் குண்டுகள் விழுந்தது போல், பறைமேளம் பயங்கரமாக ஆரவாரித்தது.

வெட்டப்பட்ட வேலியைப் பாடை தாண்டுகிறது. சிவப்பிரகாசம் அப்போதுதான் அந்தப் பையனை அவதானித்தார், மினி வானில் அவருடன் வந்த அவனை. நன்றாகச் சவரம் செய்யப்பட்ட அந்த முகத்தில் எண்ணெய் இல்லை. கண்ணீர். மார்பிலே பூணூல், கையிலே கொள்ளிக் குடம். அவன் பாடைக்கு முன்னால் நடந்து வந்தான், நிற்கும் போதெல்லாம் திரும்பித் திரும்பி அங்கே தாயைப் பார்க்கிறான்.

மாஸ்ரருக்கு ஓர் அபூர்வமான அதிர்ச்சி ஏற்படுகிறது. மூளையிலே மின்னல் கீற்றுகள் ஊடுருவுவதுபோல நிலைமைகள் தெளிவாகின்றன. அவர் மனத்திலே கேள்விகள் உருவாகின்றன.

ஏன், எதற்கு, எதனால், எப்போது?

பாடை இடைக்காட்டுப் பாடசாலையைத் தாண்டுகிறது. பல பையன்கள் மாஸ்ரரின் நினைவிலே தோன்றுகிறார்கள். கண்ணயர்ந்தவன், கொட்டாவி விட்டவன், அழுதவன், அழுக்கு உடை உடுத்தவன் இவற்றிற்கும் காரண காரியங்கள், குடும்ப - சமூகத் தொடர்புடையனவாக, துயரும் துன்பமும் நிறைந்தனவாக தவிர்க்க முடியாதவையாக இருந்திருக்கலாமோ?

அப்பால், தூரத்திலே ஆமி ஷெல்லடிக்கும் முழக்கம் பறை ஓசையை மூழ்கடிக்கிறது. ஊர்வலத்தின் முகங்களிலே மீண்டும் மரண பயம்.

எந்த முகாம்? வசாவிளான், வல்வெட்டி, பலாலி, ஊர்கள் ஞாபகத்திற்கு வருகின்றன.

அநியாயமாக இறந்த, அறிந்தவர் பலர் சிவப்பிரகாசம் மாஸ்ரரின் உள்ளத்திலே நியாயம் கேட்கப் பிறந்து கொண்டிருக்கிறார்கள். அன்பின் கலா பரமேஸ்வரன் முதல் வணக்கத்தின் வென்செஸ்லாஸ் வரை.

'நாம் அறியாதவர் யார் யாரோ?'

அகாலமான வருடங்கள்: மனசறியத் திரும்புகின்றன; 1956, 1958, 1971, 1977, 1981, 1983 ........

'இனி'?

சமூகத்தின் அலங்கோலங்கள் சோகக் காட்சி தருகின்றன. அனாதைகள், அகதிகள், விதவைகள், வக்கற்றவர்கள், கையும் - காலும், கண்ணும்- கற்பும் இழந்தவர்கள்!

ஷெல்லோசை விட்டுவிட்டுக் கேட்டுக்கொண்டே இருக்கிறது. மேலே ஹெலி ஒன்று வட்டமிடுகிறது. தமக்கைமாருடன், படலைகளில் நின்று பிரேத ஊர்வலத்தைப் பார்க்க வந்த சிறுவர்கள் பருந்தைக் கண்ட குஞ்சுகளெனப் பதுங்கவில்லை. பூவரசந் தடிகளைத் துப்பாக்கிகள் என்ற பாவனையில் உயர்த்தி ஹெலிக்குக் குறிபார்க்கிறார்கள். அவைகள் அவனுக்குத் தெரியாமலில்லை.

அவன் இப்போது பாடையைத் திரும்பித் திரும்பிப் பார்க்கவில்லை. அவனைப் பெற்ற அந்த ஒருத்தி, ஒரு மணி நேரத்தில் முழுமையாகக் கரியாகிவிடுவாள்.

அவன் கீழே மண்ணைப் பார்த்து மெல்ல நடந்து வருகிறான்; தீர்க்கமான பார்வை அது. அங்கேயும் ஒரு தாய்— அவனுடைய தாயகம்.

'அவனுடைய இந்தப் பார்வையிலும் அர்த்தம் இருப்பதுபோல் தெரிகிறது.'

நன்றி: மல்லிகை
(ஒகஸ்ற் 1986) □


# மறுசீரமைப்பு — கியூபா - ரஷ்யா உறவைப் பாதிக்குமா?

சோவியத் ரஷ்யாவே உலகின் சோஷலிசப் புரட்சிகளுக்கெல்லாம் தொட்டிலாக இருந்தது. அங்கு நிகழ்ந்த மாற்றத்தின் எதிரொலிகள் ஐரோப்பாவுக்கு அப்பால் ஆசிய, லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் சோஷலிச அரசுகளைத் தோற்றுவித்தன. இன்றோ சோவியத்தில் இன்னுமொரு புதிய பரிமாண மாற்றம் 'மறுசீரமைப்பு' என்ற பெயரில் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இதன் எதிரொலியும் முன்பு போலவே சோஷலிச நாடுகளில் கேட்கத் தொடங்கியுள்ளன. ஏற்கனவே இதற்கெனக் காத்திருந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் சில, மிகுந்த வீச்சுடன் மாற்றத்தை எதிர்கொள்கின்றன.

மாற்றத்தை அநுசரிக்கும் நாடுகளைப் போலவே சில நாடுகள் அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பனவாகவும், சம்மதம் அற்றவையாகவும் உள்ளன: குறிப்பாக சீனாவும், கியூபாவும் முறையே தமது வெளிப்படையான எதிர்ப்பை மறுசீரமைப்பிற்குத் தெரிவித்துள்ளன. சீனாவில், அண்மையில் நிகழ்ந்த மாணவர் புரட்சியின் பின்னால் நிகழ்ந்த கசப்பான அநுபவங்களின் பின்னரே, இந்த எதிர்ப்பு வெளிப்படையானது. அதன் எதிர்ப்புக்கு முன்னரேயே சோவியத்துடன் அதற்கு 30 வருடகாலமாக இருந்து வந்த நல்லுறவின்மையின் அடிப்படையில் பார்த்தால், அது அவ்வளவு கவனத்துக்குரியதல்ல. ஆனால் சோவியத்துடன் நெருங்கிய உறவு நிலையைப் பேணி வந்த கியூபா, அண்மையில் தனது வெளிப்படையான கண்டனத்தைத் தெரிவித்ததோடு அமையாது, சோவியத்தின் இரண்டு பத்திரிகைகளான மொஸ்கோ நியூஸ், ஸ்புட்னிக் என்பவற்றைத் தடை செய்ததன் மூலம் இதற்குச் செயல் வடிவமும் கொடுத்துள்ளமை வியப்பையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

சீனாவுக்கு கொர்பச்சேவ் விஜயம் செய்த போது அங்கே மாணவர் போராட்டம் நிகழ்ந்து கொண்டிருந்தது. கொர்பச்சேவ் பழைய உறவைப் புதுப்பிக்கவே அங்கு சென்றார் ஆயினும், அவர் சோஷலிச நாடுகளின் புதிய மாற்றங்களின் பிரதிநிதியாகவே அடையாளங்காணப்பட்டார். அந்த மாற்றங்கள் சீனாவிலும் வேண்டும் என்பதே போராட்டக்காரரின் கோரிக்கையாகவும் அமைந்தது. இதன் சிக்கலினால் சீனாவில் பின் நிகழ்ந்த சம்பவங்கள், மரணதண்டனைகள் எல்லாம் நாம் அறிந்ததே. இதற்குப் பின் சீனா, ரஷ்யாவினதும் அதன் அணியைச் சேர்ந்த நாடுகளினதும் மறுசீரமைப்பைக் கண்டித்ததும் தெரிந்ததே. இதே போலவே கியூபாவுக்கும் கொர்பச்சேவ் விஜயம் செய்ததும், அங்கு அவருக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டதும் நாம் அறிந்ததே. ஆனால் கொர்பச்சேவ் விஜயம் முடிந்து திரும்பிய பின்னால் இப்போது அவரது மறுசீரமைப்பை காஸ்ட்ரோ கண்டித்திருப்பதும், சஞ்சிகைகளைத் தடைசெய்திருப்பதும், சீனாவின் பாணியைத் திருப்பிக் கையாண்டது போலவே வித்தியாசமின்றி அமைந்துள்ளது. அத்தோடு அண்மையில் போதைவஸ்துப் பிரச்சனை சம்பந்தமாக உயர்ராணுவ அதிகாரிகளுக்கு அடுத்தடுத்து மரணதண்டனைகள் அளிக்கப்பட்ட சம்பவங்களைக்கூட அதனோடு மட்டும் பொருந்துவதாகக் கருதக் கூடாது. மறுசீரமைப்பின் மாற்றத்திற்குரிய குரல்கள் எழும்பட்சத்தில் அவற்றுக்குரிய எச்சரிக்கை வெடிகளாகவுமே தான், அத்தண்டனைகளைக் காண வேண்டும். துப்பாக்கி வெடிகளின் பாஷைகளுக்கும் கூட பலவித அர்த்தங்களை நாம் காணத்தவறக் கூடாது. சீனாவின் எதிர்ப்பின் பாணியோடு ஒத்ததாக கியூபாவின் பாணியும் இருப்பதை நாம் கண்டாலும், அதற்கான காரணங்களும் ஒன்றாகவே இருக்க வேண்டும் என்பதில்லை.

இரண்டு நாடுகளுக்கும் கொர்பச்சேவ் விஜயம் செய்தாரேயாயினும் அங்கு தமது மறுசீரமைப்புக் கொள்கைகளைப்பற்றி ஏதும் கூறியதே இல்லை. மாறாக மறுசீரமைப்புக் கொள்கை தமது நாட்டுக்குரிய சொந்தமான பரிசோதனை முயற்சி என்றும், அதை மற்றைய சோஷலிச நாடுகள் அப்படியே பின்பற்ற வேண்டியதில்லையென்றும், ஏற்கனவே தெளிவுபடுத்தியிருந்தார். இருந்தும் பல நாடுகளின் சோஷலிசப் புரட்சிக்கு ஆதர்சமாக இருந்த ஒரு நாடே அதன் கடந்த காலத்தினை விசாரணைசெய்து அடுத்த கட்டப் பரிமாணத்துக்குரியதாக மேற்கொள்ளும் மறுசீரமைப்பு முயற்சிகள் ஏனைய சோஷலிச அணிகளைப் பாதிக்காதென்றில்லை. அதைப் பழைய ஸ்டாலினிசப் பார்வை கொண்டவர்கள் எதிர்ப்பதிலும் வியப்பில்லை. ஆனால் இதில் விசித்திரம் என்னவென்றால், ரஷ்யாவுக்கு முதல் தமது நாடுகளில் 'சுதந்திர வர்த்தக வலயங்களை' ஏற்படுத்திய இவ்விரு நாடுகளும், இதை எதிர்ப்பதுதான். சீனாவின் மாணவர் புரட்சிக்கான காரணமே சீனாவில் பொருளாதார மாற்றங்களோடு சமநேரத்திலேயே அரசியல் மாற்றங்களும் நிகழ்ந்திருக்காததே என்று ரஷ்யா கூறியிருந்ததையும் நாமிங்கு கவனத்திற் கொண்டால், விடயம் தெளிவாகும். ரஷ்யாவின் மறுசீரமைப்பு தனியே பொருளாதாரத்தில் மட்டுமே நிகழ்வதாயின் இவ்வகை நேர்ந்திருக்காது. மாறாக அரசியல் மாற்றமும் கைகோத்து நிகழ்ந்ததே அவற்றின் எதிர்ப்புக்குக் காரணமாயிற்று.




எதிர்ப்புக்கான காரணங்கள் சில இரண்டுக்கும் பொதுவேயாயினும், கியூபாவுக்கென பிரத்தியேகமான புவியியல் அமைவிடத்துக்குரிய காரணியையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். கியூபா புவியியல் ரீதியாக ரஷ்யாவுக்கு மிகுந்த தொலைவிலும் அமெரிக்காவுக்கோ 60 மைல் அணித்தாகவும் உள்ளது. ஏற்கனவே பொருளாதார ரீதியிலான சிறு மாற்றத்தின் இடைவெளியூடே போதைவஸ்து லாகிரி வேட்டைக்காரர் புகுந்து கொண்டதைப்போல அரசியல் மாற்றம் என்ற நெகிழ்வின் ஊடாக உட்புகும் அமெரிக்க ஏகாதிபத்தியம் சோஷலிச கியூபாவை கபளீகரம் பண்ணிவிடும் ஆபத்தும் எதிர்பார்க்கக் கூடியதே. ரஷ்யாவுக்கு அணித்தாக உள்ள கிழக்கு ஐரோப்பிய நாடுகளைப் போலன்றி கியூபா அமெரிக்க பாதுகாப்பு வலைப்பின்னலுள் உள்ள தனித்த ஒன்றாகவும் உள்ளது; அத்தோடு சீனாவைப் போன்ற பெரிய நாடும் அல்ல. இந்நிலைமைகள் மறுசீரமைப்பை கியூபா ஏற்றுக் கொள்ள முடியாமைக்குரிய காரணங்கள். அதே சமயம் இக் காரணங்கள் ரஷ்யாவின் உறவை முறிக்க முடியாதுள்ளதற்குமான காரணங்களுமேதான். அமெரிக்க பாதுகாப்பு வலைப்பின்னலுக்குள் தனக்குச் சாதகமான உறவையும், தளமாகப் பயன்படும் நிலையையும் கொண்டதாக கியூபா இருப்பதனால், ரஷ்யாவும் எந்த நிலையிலும் கியூபாவை சிறிய நாடென்று உதறிவிட முடியாது. அத்தோடு ஏற்கனவே ரஷ்யா மேற்கொள்ளும் வெளிநாட்டுறவுக் கொள்கைகளுக்கேற்ப நடந்துகொள்வதிலும் — உ + ம் அங்கோலா படைவிலக்கம் — கியூபா இணக்கமான போக்கையே கடைப்பிடிக்கிறது. இப்படியிருந்தும் கியூபா, மறுசீரமைப்பு விடயத்தில் தனக்குப் பிடிக்காவிட்டால் மௌனமாக இருப்பதை விடுத்து, ஏன் எதிர்க்குரல் எழுப்புகிறது? இங்குதான் ஓர் உண்மை வெளிப்படுகிறது. எதிர்ப்புக் குரலின் கனதியும் சஞ்சிகை தடையுமே, கியூபாவினுள்ளே மறுசீரமைப்புக்கான குரல்களும் அதைநோக்கிய சிந்தனைத்தேடலும் இருப்பதை, அடையாளம் காட்டி விடுகிறது. மரணதண்டனைகள், வெடி ஓசைகள் கூட இவற்றை நோக்கிய எச்சரிக்கைகளேதான். ஆனால், எப்போதுமே வெடி ஓசைகளால் அல்ல விவேகமான அணுகு முறைகளால்தான் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணலாம் என்பதை, காஸ்ட்ரோ உணரத் தவறக்கூடாது. □

சி. சண்முகவடிவேல்

# ஜே. ஆர். — பிரேமா போராட்டம்!

நிறைவேற்றதிகாரமுள்ள ஜனாதிபதி முறைமை இலங்கைக்குப் பொருத்தமுடையது தானா எனப் பரிசீலனை செய்ய ஒரு தெரிவுக் குழுவை நியமிக்க வேண்டுமென, அண்மையில் ஜே. ஆர். பேட்டியளித்திருந்தமை அனைவரும் அறிந்ததே. உண்மையில் இது பிரேமதாஸாவுக்கு எதிரான கருத்தென்பதே அரசியல் அவதானிகளின் அபிப்பிராயமாகும். இவ்வாரம் மீண்டும் ஒரு கணையை ஜே. ஆர். தொடுத்துள்ளார். இலங்கையின் இன்றையப் பிரச்சினையைச் சமாளிப்பதற்கு, எதிர்க்கட்சிகள் அனைத்தையும் உள்ளடக்கிய ''தேசிய அரசாங்கம்'' ஒன்றை உருவாக்க வேண்டியது அவசியம் என அவர் கூறியுள்ளதே, அது.

ஜே.ஆரின் ஆட்சிக்காலத்தில் இப் பிரச்சினைகள் இருக்கவில்லையா? ஏன் அவர் அப்போது ஒரு தேசிய அரசாங்கத்தை அமைக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை? ஒன்றுக்கு இரண்டு தடவைகள் அவர் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாக இருந்தாரே! அக்காலத்தில், அதாவது தனது முதலாவது பதவிக்காலம் முடிந்த பின்பாவது அப்படி ஒரு தெரிவுக்குழுவை நியமித்து, ஜனாதிபதி முறைமை பொருத்தமுடையது தானா எனப் பரிசீலனை செய்திருக்கலாமே? ஏன் அவர் அதை மேற்கொள்ளவில்லை? ஆனால் உண்மை இதுதான்:

தன்னை ஓர் ஆயுட்கால ஜனாதிபதியாகக் கற்பனை செய்து கொண்டு, இவ்வாறான சர்வாதிகாரத் தனமான ஜனாதிபதி முறைமையை, ஜே. ஆர். உருவாக்கினார். ஆனால் இன்று அந்த அதிகாரம் பிரேமதாஸாவின் கையில் இருப்பதை ஜே. ஆரால் சகித்துக் கொள்ள முடியவில்லை. எனவேதான் தெரிவுக் குழுவை நியமிக்க வேண்டும் என்று தனது முதற் கணையைத்தொடுத்த ஜே.ஆர். இரண்டாவது கணையாக ''தேசிய அரசாங்கம் அமைத்தல்'' எனும் பூதத்தைக் கட்டவிழ்த்துள்ளார். பிரேமதாஸாவைப் பதவி இறக்க, அல்லது அவரது அதிகாரத்தைக் குறைக்க எடுக்கும் நடவடிக்கை இது என்றே, அபிப்பிராயப்பட வேண்டியுள்ளது.

எனவே பிரேமதாஸா தனது பதவியைப் பாதுகாக்க ஜே.வி.பி.க்கு எதிராக மட்டுமன்றி, ஐ.தே.க. வுக்குள் உள்ள எதிர்ப்புச் சக்திகளுக்கு எதிராகவும், அரசியலிலிருந்து '' ஓய்வு பெற்ற '' ஜே. ஆருக்கு எதிராகவும், இன்னும் பல சக்திகளுக்கு எதிராகவும் போராடவேண்டியுள்ளது.

— சுதேசி □

## சிந்தனை...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதைக் கண்டுபிடித்தார்கள். கட்டாயமாக்கினார்கள். இன்றுவரை தொடர்கிறது. இந்தச் சீருடையின் பின்னால் சமூகத்தின் வெறுக்கத்தக்க மனப்பான்மை மறைக்கப்படுகிறது. பிற்போக்குத்தனமான எண்ணம் வளர்க்கப்படுகிறது. ஒரு மெய்யான சமூகமாற்றம் தம் முன்வேண்டிக்கிடப்பதை மாணவர்கள் உணர்வது தடுக்கப்படுகிறது. ஆக ஒருபோலி சமத்துவம் பாடசாலை மதில்களுள் பவனி வருகிறது. திரு. குகரூபன் போன்றோரின் ''சீருடை நோக்கம்'' வெளுத்ததெல்லாம் பால் என்றும், கறுத்ததெல்லாம் காகமென்றும் மாணவர்களை நம்பவைப்பதே. ''சீருடை நோக்கம்'' இதற்கு முரண்பட்டிருப்பின் புதிய சந்ததியாவது தன் சிந்தனையிலிருந்து சமூகக்கேடுகளை ஒழித்திருக்கும். ஆனால் எல்லாமே மேடையில் பேசவும் பத்திரிகையில் எழுதவுமே சாத்தியப்பட்டது.

''சீருடையை'' வெறுத்தாலும் ''ஸ்டைலுடையில்'' மகிழும் திரு. சித்தார்த்தனின் மாணவர்கள்போல் எல்லா மாணவர்களும் இருக்கமுடியுமா? ''சீருடை நோக்கால்'', மறைக்கப்பட்டு வந்த மாற்றத் தேவைகளை தனியார்கல்வி நிலையங்களில் மாணவர்கள் (எல்லோருமல்ல) உணர்கிறார்கள். இதற்கு தனியார்கல்வி நிலையங்களின் நாகரிக உள்வாங்கல்கள் உதவுகின்றன. தன் சகமாணவனுக்கும் தனக்குமிடையிலான இடைவெளியை எண்ணி உள்ளூரவேதனையுறும் மாணவ உள்ளங்கள் வெளியே தெரிவதில்லை. அவையே மாற்றத்தின் தேவையை உணர்கின்றன. மாற்றத்தின் தேவையை ஒரு மாணவன் வேறு நிலையில், வேறு இடங்களில் உணர வாய்ப்பில்லையோ என்ற கேள்வி எழலாம். தன்னை ஒத்த மற்றொன்று சில இயல்புகளில் தன்னிலிருந்து விலகி நிற்கும்போது, அதுவும் தன்னால் அடையக்கூடிய தொலைவில் நிற்கும் போது எழுகின்ற இயல்பான உணர்வின் அழுத்தமும், தீவிரமும் துலக்கமாக இருக்கும் என்பது அனுபவபூர்வமானது. □

## ஸ்ரீதரனின்...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாக, அத்தியாயம் ஒன்றில்-சொர்க்கத்தில், (நர)தேவர்கள் அமுத பானுதியில் மூழ்கும் வேளை; அத்தியாயம் ஏழில்-பாதிரியார் செவுத்தியைத் தேடிக் கொண்டு சேரிப் பொந்துகளுக்குள் நுழையுங் காட்சி என்பனவற்றைக் குறிப்பிடலாம். இக்காட்சிகள் வெறுமனே கற்பனையில் வரக் கூடியவையல்ல. நேருக்கு நேர் தரிசித்த-இன்றுந் தரிசிக்கக் கூடிய நேரநுபவங்களே ஆசிரியர் உள்ளுணர்வில் ஊறி, எழுத்தில் வெளிவந்திருக்கின்றன. இது சிறந்த படைப்பாளிக்குக் கிடைக்கக் கூடிய வரப்பிரசாதம்.

இதே இடத்தில், ஆசிரியரின் சொல்நடையையும் வார்த்தைச் சிக்கனத்தையும் சிறப்பித்துக் கூற வேண்டியுமுள்ளது. கொழும்பு முஸ்லிம்களின் பேச்சுத் தமிழ், கரீம் வாயிலாக இங்கு வெளிப்படுகிறது. 'கதப் பொஸ்தவம்' -'மோந்து' -''இந்தப் பாதர் மாருங்க இந்த மாதிரிப் பொஸ்தவம் படிப்பாங்க, நீயே பாதர் கிட்ட வித்துக்க......''
போன்றவரிகளிற் காணப்படும் சொற்பிரயோகம் மிகவும் இயல்பாகவுள்ளது. இதே போல், இவர் தனது கருத்துக்களை மிகவும் இறுக்சமாகவும், அதே வேளையில் உறைப்பாகவும் தருகிறுர்.

மேலுலகச் சொர்க்கத்தை இங்கு உருவகப்படுத்தும் உத்தியும் சிறப்பாகவுள்ளது. ''... ... எசக்கியும் செவுத்தியும் கொழும்பு மாநகர சபைச் சுத்திகரிப்பு வாகனமேறிய பெம்மான்கள்''; ''சமயம் இல்லாத ஆத்துமா'' ...''ஒரு ரூபாயுடன் நாக்கை நனைத்துக் கொண்டால் எப்போதும் மகன் பீட்டருடன்— ஏன்? வீட்டில் எல்லாருடனும் சண்டையில்தான் முடியும்......''; ''நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம் என்பதை செவுத்தியானுக்குள் செலுத்திவிட முயன்றுன்...'' (அத்.02) போன்ற இழைகளுக்குள், சொற்சிக்கனத்தின் செம்மையைக் காண முடிகிறது.

ஆசிரியர் கதையை, தனது கூற்ருகவே (self naration) கூறிச் செல்வதால், பிறர் கூற்றில் காணக்கூடிய மொழிநடையை இங்கு விரித்துக் காண முடியாதிருக்கிறது. இருப்பினும், அதிலும் தனக்குத் தேர்ச்சியுண்டு என்பதை இவர் ஓரிரு இடங்களிற் சுட்டாமற் சுட்டிச் செல்கிறுர்.

கதையின் இறுதி அத்தியாயத்தில், பாதிரியார் தனது சொர்க்கானுபவத்தை நிலைநாட்ட தன் இளமையையும், இறைமகன் தந்த வாசகங்களையும் இரை மீட்கிறுர். இதனை ஆசிரியர் இங்கு,ஒருபின்னேட்டக் காட்சி (Flash-back) யாக வெளிப்படுத்துகிறுர். இந்தப் பின்னேட்டம், சுதைக் கவசியம்போல் தெரியவில்லை. இது, செவுத்தியான் - கரீம் —எசக்கி—அலிஸ்—விஜித .... என்போரின் கதைக்குப் புறம்பாக நிற்பதுபோல் இருக்கிறது.

''என் பிதா எனக்குத் தந்த கோப்பையில் அல்லவோ நான் பருக வேண்டும்'', என்ற கருத்தைக் கதையோடு இணைக்க இவ்வளவு தூரம் அவர் செல்லவேண்டியதில்லை. எட்டாம் அத்தியாயத்தோடு இந்த வாசகத்தைத் தந்து, கதையை முடித்திருந்தால் சலிப்பை (boring / monotonous)க் குறைத்து, அடிக்கரும்பைச் சுவைக்கும் இன்பங் கிடைத்திருக்கும்.

கதையினூடாகக் காட்சிதந்த படங்கள் யாவும் 'ஆபிரிக்கப் பாணி' யில் தர வேண்டிய அவசியமில்லை. இக்கதை ஈழத்து — கொழும்பு முடுக்கு (பொந்து) மாந்தர்களின் கதை. நம்நாட்டின் மணங்கமழ அவர்களை நேரடியாகவே முகஞ் செய்திருக்கலாம். இது, 'நவீனக் கலையோவியம்' (modern -art) எனச் சைத்திரிகர் நியாயங் கற்பித்தாலும் எமக்கென்னவோ இஃதோர் அந்நிய தரிசனமாகவே இருக்கிறது. பாத்திரங்களின் மனே பாவங்களையும், சலன -அசலன விம்பங்களையும் இச் சித்திரங்களில் தீட்டிக்காட்ட முடியுமாயினும் பாத்திரங்களின் யதார்த்த நிலையுருவங்களை மாறிப்பார்க்க முடியாது. இதனை நவீனக்கலை ஓவியர்கள் ஆழமாகச் சிந்திக்க வேண்டும். எம்மண்ணின் மணத்தோடு தேசியம் வளரவேண்டும் என்பதே எமது கருத்து.

ஒட்டுமொத்தமாகக் கூறின் -இக் குறுநாவலில், ஈழதேசியத்தின் அடிமட்டத்து மாநுட அவலங்களைச் சித்திரிப்பதற்கு, ''என் பிதா எனக்குத் தந்த கோப்பையில் அல்லவோ நான் பருக வேண்டும்'', என்ற மூலக்கரு இருவேறு உலகோடு (உலகாயதம்-ஆன்மீகம்) ஒப்பியல் நோக்கில் உருப்படுத்தப் பெற்றிருக்கிறது.

அவனவனுக்குக் கிடைத்த சந்தர்ப்ப சூழலே அவனவனை வளர்க்கிறது - வாழவைக்கிறது - மாளவைக்கிறது. ஆதலால், அவனவன் பாத்திரத்தில் அவனவனுக்குக் கிடைத்ததைப் பருகிக் கொள்ள வேண்டும் என்பதே! □

## ஆண்களின்...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைப்பட்டால் ஒரு நாட்டின் எதிர்காலம் கேள்விக் குறியாகி விடும். ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையேயான சமத்துவமான வாழ்வை வலுவூட்டும் முயற்சிகளை விடுத்து, ஆண்களை எதிர்த்து இவர்கள் போராட நினைப்பது எதிர்காலத்தில் பல பாரிய தாக்கங்களை ஏற்படுத்தும்.

எமது சமுதாய அமைப்பிலே ஏற்றத்தாழ்வுகளும், முரண்பாடுகளும் நிறைந்து காணப்படுவது கண்கூடு. இருப்பினும் சங்ககாலம் தொட்டு சமீப காலம் வரை எமது சமுதாயத்திலே பெண்களுக்கு ஒரு சிறப்பான இடம் ஒதுக்கப்பட்டு வந்தமை, உள்ளங்கை நெல்லிக்கனி. பெண்களை மேலானவர்கள் என்றும்,உயர்ந்தவர்சள்என்றும்கருதியமையினுல்தான்,இன்று எம்மிடையே காணப்படும் பல முக்கியமான மதங்களிலே பெண் தெய்வங்கள் உள்ளன என்று கருத இடமுண்டு. சங்ககாலப் புலவர்களிலே ஒரு ஔவையும், இராமாயணத்தில் ஒரு சீதையும், மகாபாரதத்திலே ஒரு திரௌபதையும், சிலப்பதிகாரத்திலே ஒரு கண்ணகியும், எப்படி ஒரு உயர்வான ஸ்தானத்தில் வைக்கப்பட்டிருந்தார்களோ அதுவே ஆண் ஒரு பெண்ணுக்கு வழங்கிய சமவுரிமை, அங்கீகாரம் என்பது தெளிவு.

சட்டங்களும், உரிமைகளும், கடமைகளும் பெரும்பாலும் ஆண், பெண், ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடின்றி சரிநிகர் சமானமாகவே சகலருக்கும் உள்ளன. தேசவழமைச்சட்டத்திலும் அப்படியே. இருப்பினும் ஒரு குடும்பத்தை நிர்வகிக்கும் — பாதுகாக்கும் ஆற்றல், பெரும்பாலும் ஆண்களுக்கே இருப்பதால் சில சந்தர்ப்பங்களில் ஆண்களுக்குச் சாதகமாக அவை அமைகின்றன. உதாரணமாக ஒரு சொத்தை விற்க விரும்பினுல் அதற்குக் கணவனின் அங்கீகாரம் கிடைத்தால் மட்டும் போதுமானது. இந்த உரிமை தங்களுக்கும் இல்லையே என ஆதங்கப்படுகிறுர்கள் இன்றைய பெண்கள். கருத்தரங்குகளிலும், விவாத மேடைகளிலும் இது போன்ற கருத்துக்களை அவர்கள் ஆராய்ந்து-வ்வாதித்து வருகின்றுர்கள்.

ஒரு காலத்திலே அடிமைச் சந்தையில் விலை பேசப்படும் பொருட்களாகச் ''சில பகுதிகளில்'' மதிக்கப்பட்டு வந்த பெண்ணினம் இன்று, உலக அரங்கிலே மாபெரும் அரசியல்வாதிகளாகவும், அதன் மூலம் ஒரு நாட்டையே நிர்வகிக்கும் திறன் வாய்ந்தவர்களாகவும், பல பெரிய நிறுவனங்களின் இயக்குநர்களாகவும், சிறிய சிறிய அலுவலகங்களிற்கூட ஆண்களுக்கு நிகரானவர்களாகவும் திகழ்ந்து வருவது, எதிர்கால ஆண் சந்ததியினருக்கு ஒரு அச்சுறுத்தலாகும். இத்தகைய வளர்ச்சியை அவர்களுக்குப் பெற்றுக் கொடுத்தமைக்கு ஒருவகையில் ஆண்களும் துணை நிற்கிறுர்கள் என்பதை அவர்களால் மறுக்க முடியுமா? இந்த இருபதாம் நூற்றுண்டு கொம்பியூட்டர் யுகத்தில், ஆண்களை விடத்தாங்கள் முன்னேறிவிட வேண்டும் என்ற முன்னேற்ற வெறிக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. அண்மைக்கால மதிப்பீடுகள் தெரிவித்த விபரங்களைக் கருத்தில் கொண்டு, ஒரு காலத்தில் ஆணினம் பெண்ணினத்துக்கு அடிமைப்பட்டுப் போகாமலிருப்பதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

பெண்களை அடிமைப்படுத்திக் கொடுமைப்படுத்த வேண்டுமென்பதை விடுத்து, அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய உரிமைகளுக்கு உரிய காலங்களில் மதிப்பளித்து, சம உரிமை பேணப்படவேண்டும். ஆனல் ஆண்களை அடிமைப்படுத்தும் முயற்சியிலே பெண்கள் இறங்கினுல் அது எதிர்காலத்தில் பாரதூரமான விளைவுகளையே ஏற்படுத்தும். □

## நிகழ்வுகள்

### 1-8-89 செவ்வாய்

ரெலோ எம்.பி.யான ஜே. திவ்வியநாதன் கட்சியிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டிருப்பதாக செயலதிபர் அ. செல்வம் தெரிவித்தார். ரூபாவாஹினிப் பேட்டியில், அமைதிப் படை விலக்கிக்கொள்ளப்பட வேண்டும் என்று திவ்வியநாதன் குறிப்பிட்டதே இதன் காரணம் □ இடைவெளியின் பின் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியூர்களுக்கான பஸ்சேவைகள் வழமைபோல் நடைபெற்றன □ வட-கிழக்கு மாகாண சபையின் முஸ்லிம் கொங்கிரஸ் உறுப்பினரான ஜனுப் அலி உதுமான், மாலை 5 மணியளவில் அக்கரைப்பற்றில் சுட்டுக் கொல்லப்பட்டார் □ கொழும்பு செட்டியார் தெருவில் இரவு ஏற்பட்ட தீ விபத்தில் 8 கடைகள் சாம்பலாகின □

### 2-8-89 புதன்

புதுடெல்லியில் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளை உன்னிப்பாக அவதானித்து வருவதாக, சிறிமாவோ அறிக்கையொன்றில் தெரிவித்தார் □ கொழும்பில் ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வருவதற்குச் சற்று முன்னர் புறக்கோட்டை, பொரளை, ஹவ்லொக் ரவுண், ஆகிய இடங்களில் மூன்று குண்டுகள் வெடித்தன; 6 பொலிசாரும் சில பாதசாரிகளும் காயமடைந்தனர் □ முதல்வர் அ. வரதராஜப்பெருமாள், இந்தியப்படை விமானமொன்றில் திடீரென புதுடெல்லி பயணமானுர். அங்கு இரண்டு அரசுகளிடை நடக்கும் பேச்சுவார்த்தை தொடர்பாகவே, இவரது பயணம் அமைந்துள்ளதாம் □ நண்பகல் வல்வையில் மோதல் சம்பவம் நிகழ்ந்தது. சில ஜவான்கள் உயிரிழந்தனர்; கடைகள், குடியிருப்புகள், ஷெல் தாக்குதலில் சேதமுற்றன □ மாலை திம்பிரிகஸ்யாயவிலுள்ள பொலிஸ் தலைமைக் காரியாலயத்தைத் தீவிரவாதிகள் தாக்கி, பெருந்தொகை ஆயுதங்களை எடுத்துச் சென்றனர் □

### 3-8-89 வியாழன்

இலங்கை — இந்தியக் குழுக்களிடையில் கடந்த ஆறு நாட்களாக நடந்த பேச்சுவார்த்தைகள் தமக்குத் திருப்திதரவில்லையென, அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின, புதுடெல்லியில் கவலை தெரிவித்தார். இதே வேளை பேச்சுக்கள் திருப்தியாக நடைபெற்றதாக இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர் □ யாழ். மாநகரசபையின் முன்ஞள் துணை மேயர் ஆ. துரைராஜசிங்கம் காலமானுர் □ வல்வையில் பதட்டம் தொடர்ந்து நிலவியது. வர்த்தக நிலையங்கள், வீடுகள் பலவும் எரிந்து சாம்பலாகின; மக்கள் அயற்கிராமங்களை நோக்கிச் சென்றனர்; ஊரிக்காட்டிலுள்ள சிறீ லங்கா இராணுவ முகாமிலும் பலர் தஞ்சமடைந்தனர் □ வடமராட்சிப் பகுதி எங்கணும் இன்றும் உத்தியோகப் பற்றற்ற ஊரடங்கு அமுல்செய்யப்பட்டது

### 4-8-89 வெள்ளி

யுத்த நிறுத்தத்தை அறிவித்து, கேந்திரமையங்களில் இந்தியப்படை நிலை கொள்ள வேண்டுமென, ஈரோஸ் பாலகுமாரன் அறிக்கையொன்றில் தெரிவித்தார் □ வல்வெட்டித்துறைப் பகுதிகளில் பாதிப்புக்குள்ளாகியிருக்கும் மக்களிற்கு உதவுமாறு, பொதுஸ்தாபனங்களிடம், வடமராட்சியின் மூத்த பிரமுகர்கள் கோரிக்கை விடுத்தனர் □ ஏழு நாட்களாக புதுடெல்லியில் பேச்சுவார்த்தை நடத்திய இலங்கைக்குழு, இரவு நாடு திரும்பியது □ ஜே.வி.பி. யினரின் ஊரடங்கு அறிவிப்பினுல் கொழும்பு வெறிச்சோடியது □ இலங்கையின் இனப் பிரச்சினைத்தீர்வுக்கான சகல பேச்சுக்களிலும் இந்தியா பங்கு கொள்ளவேண்டுமென, மூன்று இயக்கங்கள் இணைந்த 'தமிழர் தேசிய சபை' திருகோணமலையில் தீர்மானம் நிறைவேற்றியது □

### 5-8-89 சனி

பயிலுனர் ஆசிரியர் திட்டத்தில் முன்னுரிமை வேண்டுமெனக் கோரி 400 தொண்டர் ஆசிரியர், மட்டக்களப்பில் உண்ணுவிரதம் இருந்தனர் □ வல்வையில் புதன் நடந்த அசம்பாவிதங்களில் எழுபதுக்கும் அதிகமானேர் கொல்லப்பட்டதாகச் செய்திகள் வெளியாகின □ புதுடெல்லியிலிருந்து திரும்பிய குழுவினர், அங்கு நடைபெற்ற பேச்சுக்கள் பற்றிய விளக்கத்தை கதிர்காமத்தில் ஜனுதிபதியிடம் தெரிவித்தனர் □ ஜீ.சி.ஈ. உயர்தரப்பரீட்சைகள் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் அறிவித்தார் □

### 6-8-89 ஞாயிறு

ஆயிரக்கணக்கான பக்தர் திரண்டிருக்க காலை பத்து மணிக்கு, நல்லூர்க் கந்தன் ஆலயக் கொடியேற்ற விழா நடை பெற்றது □ கடந்த இரண்டு ஆண்டுகளாக இங்கு இருந்த 900 இந்தியப் பொலிசார் இந்தியா திரும்பினர் □ உடுப்பிட்டி, நெல்லியடி முகாம்களை நோக்கித் தாக்குதல் நடத்தப்பட்ட போது, பதிலாக ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டன □ வல்வையில் கைதான இளைஞர்களை விடுவிக்கும் முயற்சியில் ஈ.ஜ.மு. எம்.பியான கணபதிப்பிள்ளை ஈடுபட்டார் □

### 7-8-S9 திங்கள்.

பருத்தித்துறை நகரம் வழமை நிலைக்குத் திரும்பி வருகிறது. பருத்தித்துறை கொழும்பு பஸ் சேவையும் ஆரம்பமாகியது □ மாத்தறை, சேகாலை, அம்பலாந்தோட்டைப்பகுதிகளில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. அண்மையில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டமையைக் கண்டித்தே இது நடைபெற்றது □ வட-கிழக்கு மாகாணசபையின் பணிப்புரையின் மீது மட்டக்களப்பில் பாடசாலைகள் திறக்கப்பட்டன; எனினும் மாணவர்கள் சமூகந்தரவில்லை; ஆசிரியர் மட்டும் வந்திருந்தனர் □ வட-கிழக்கு மாகாணசபையின் முதலாவது வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது; முஸ்லிம் கொங்கிரஸ் கூட்டத்தைப் பகிஷ்கரித்தது □

திசை
THISAI

## திசைமுகம்

*''சுதந்திர ஒளியினில் மனங்குளி
அதன்வழி திசையெலாம் துலங்கவே''*

### அவதந்திரம், தனக்கந்தரம!

இந்தியப்படை விலகல் விவகாரம் இன்னும் 'சுற்றிச் சுற்றி சுப்பற்ற கொல்லையில்' என்ற நிலையிலேயே உள்ளது.

இலங்கை இனப்பிரச்சினை என்ன நிலையில் இன்று இருக்கிறதோ அதே நிலையிலேயே இந்தியப்படை விலகல் விவகாரமும் நிறகிறது.

இலங்கை இனப்பிரச்சினை என்றைக்குமே தீர்த்துவைக்கப்பட விரும்பாத 'ஒத்திவைப்பு' வரலாற்றைக் கொண்டதாகவே இருந்து வருகிறது; வந்துள்ளது. இந்த ஒத்திவைத்தலைச் சிங்களத் தலைமைகள் செய்துவந்ததன் மூலமே தம்மையும் தமது அரசியல் வாழ்க்கையையும் வளர்த்து வந்துள்ளன.

இந்த ஒத்திவைத்தலையே தனது சிறப்புக் கலையாகக் கையாண்டவர் முன்னைய ஜனாதிபதி ஜே. ஆர்.

தமிழர் பிரச்சினையை ஒத்திவைப்பதென்பது அவரின் ராஜதந்திரமாகக் கருதப்பட்டது; அவரது சாணக்கியம் என்று விதந்தோதப்பட்டது.

1983 க்குப் பின்னர் சர்வகட்சி மாநாடு கூட்டி இதைத் தீர்த்துவைக்கப்போவதாக இழுத்தடித்து ஒத்திவைத்தவரவர். பின்னர் இந்தியா இது சம்பந்தமாக அக்காலங்களில் மத்தியஸ்தம் செய்ய முன் வந்தபோது, மத்தியஸ்தம் செய்யவந்த பார்த்தசாரதி சரியில்லையென்று இழுத்தடித்தவர் இவர்.

பின்னர் இப்பிரச்சினையைத் திம்புவுக்கு இழுத்து பண்டாரியோடு ஊறப்போட்டவர் இவர். அதன் பின்னர் இந்திய இலங்கை ஒப்பந்தம் என்று சொல்லி ஒப்பந்தத்தில் கூறப்பட்டவற்றை காலங் கடத்துவதற்கு காய் நகர்த்தியவர் இவர்.

இவர்தான் இப்பொழுது தனது பிடி தளர்ந்த பின்னரும் 'தேசிய அரசாங்கம்' ஒன்றைத் தீர்வாகக்கொண்டுவர முன்நின்று, குட்டுப்பட்டவர்.

இவர் தனது ஒத்திப்போடலை கலையாகவும், அதன்மூலம் தமிழ்பேசும் இனத்தை ஏமாற்றுவதை ராஜதந்திரமாகவும் கொண்டதன் பலனை இன்று சிங்களஇனம் அனுபவிக்கத் தொடங்கியுள்ளது. இவர் புரிந்தது ராஜதந்திரமல்ல. அது அவதந்திரம். அது தற்போது தன்னினத்துக்கே அந்தரமாக முடிந்துள்ளது.

இன்று சிங்கள இனம் தன்னையே அழித்துக்கொள்ள நேர்ந்ததின் காரணத்தை, இவர்கள் தமிழ் மக்கள் பிரச்சினையைத் தீர்க்காது அதை ஒத்திவைப்பதை ரரஜதந்திரம் என நினைத்ததிலேயே பார்க்க வேண்டும்.

ஜே. ஆர். ராஜதந்திரியல்ல. ஒரு சாமான்ய அவதந்திரி.

ராஜதந்திரமென்பது மேன்மையானது, தன்னையும் காப்பாற்றி, பொது நன்மையையும் முன்னிட்டு செயற்படும புத்திக் கூர்மை மிக்கது அது. இன்று கொர்பச்சேவின் நடவடிக்கைகள் இதற்கு உதாரணம்,

இந்த ஒத்திவைத்தல்கள் ராஜதந்திரம் என நினைக்கும் வரை, இந்தியப்படை மட்டுமல்ல, எல்லாப்படைகளும் இங்கே கடைவிரிக்கும் வாய்ப்பே ஏற்படும்

# ஜனசக்தியும் கூப்பன் குழறுபடியும்

ஜனசக்தித் திட்டத்திற்குக் குடமுழுக்கு விழா ஓசைப்படாமல் நடந்தேறி விட்டது என்று நினைத்துக் கொண்டிருந்த நேரத்தில், யாழ். உதவி அரசாங்க அதிபர் பணிமனை உத்தியோகத்தர்களும் திட்டமிடல் அதிகாரிகளுமாகச் சேர்ந்து, முதற் காரியமாக ஜனசக்தித் திட்டத்தைச் செய்து முடிப்பதில் தீவிரமாகச் செயற்படுகிறார்களாம். சில அதிகாரிகள் இது தொடர்பாகக் கொழும்புக்கும் 'காவடி' எடுத்துள்ளார்கள்.

இச்சமயத்தில், கிணறு வெட்டப் பூதம் வெளிவந்ததுபோல், வறுமை நிவாரண உணவு முத்திரை 4-ஆவது தொடர் (கூப்பன் புத்தகம்) விநியோகத்தில் குழறுபடிகள் பற்றியும் ஒரு கதை வெடித்திருக்கிறது.

வறுமை நிவாரண ஆணையாளரின் பணிப்பின் பேரில் சமீபகாலத்தில் யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 11 கிராம சேவகர்கள் டிவிஷன்களில் இது வரை 17,000 குடும்பங்களுக்கு உணவு முத்திரைகள் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது, இந்த உணவு முத்திரை வைத்திருப்பவர்கள் ஜனசக்தி வறுமை ஒழிப்புத் திட்ட உரித்தாவணத்தைப் பெறத் தகமை உடையவர் ஆகிறார்கள்.

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் ஜனசக்தித் திட்டத்தை அமுல் படுத்த தெளிவான வெளிவாரி – உள்வாரி முகவர்களைக் கொண்ட ஆரம்பக் குழுக்கள் சமர்ப்பித்த முன்னுரிமைப் பட்டியலை ஆராய்ந்த உயர் அதிகாரிகள், சுமார் 6000 குடும்பங்கள் ஜனசக்தித் திட்டத்தால் கிடைக்கும் நன்மைகளைப் பெறத் தகுதியுடையவர்கள் என்று முடிவு கட்டியதாகத் தெரிய வருகிறது.

அடுத்து வறுமை நிவாரண உணவு முத்திரை பெறாத வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மேலும் 2000 குடும்பங்களை ஜனசக்தித் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளலாம் என்றும் யாழ். உதவி அரசாங்க அதிபர் மட்டத்தில் செயற்படும் அதிகாரிகள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்களாம்.

தகமை இருந்தும் உணவு முத்திரை பெறாமல், மற்றவர்களுக்கு— ரூபா 700க்கு மேல் மாதவூதியம்பெறும் அரசாங்க உத்தியோகத்தர் உள்ள குடும்பங்களுக்கும், வெளிநாட்டில் நல்லவருமானம் உள்ள வேலைகளில் அமர்ந்திருக்கும் குடும்பங்களுக்கும் உணவு முத்திரை வழங்கியிருப்பது ஓர் இமாலய ஊழல் நடந்திருப்பதைக் காட்டுகிறது.

மேலும், இன்று ஆசிரியர் நியமனத்துக்கு கல்வித் தகமை, நற்சான்றிதழ்களுடன் உணவு முத்திரை உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும், என்று கல்வி அமைச்சு அறிவித்தல் கூறுகிறது. இதனால், தகுதியிருந்தும் உணவு முத்திரை பெறாத பலர் செய்வது தெரியாமல் விழித்துக் கொண்டு நிற்கிறார்கள். இந்த உணவு முத்திரை ஊழல் குறித்து மேலிடம் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றாலும், கவலைப்படுவதாகத் தெரிகிறது.

## பாதிக்கப்பட்டவர்களுக்கு அலுமினியப் பாத்திரங்கள்

1987இல் ராணுவ நடவடிக்கைகளினால் வடபகுதியில் பாரிய அளவில் பாதிக்கப்பட்ட இடங்களிலுள்ள குடும்பங்களுக்கு வழங்குவதற்கென, இந்திய அரசு, சமையல் அறையில் பயன்படுத்தக்கூடிய எவர் சில்வர், அலுமினியப பாத்திரங்களை யாழ். செயலக அதிகாரிகளிடம் கையளித்துள்ளதாகத் தெரிய வருகிறது.

வெகுவாகப் பாதிககப்பட்ட குறிச்சிகளிலுள்ள குடும்பங்களுக்கு, இவை மிக விரைவில் வழங்கப்படும். யாழ்ப்பாணம் டச்சுக் கோட்டைக்குப் பின்புறமாகக் கரையோரமாக அமைந்துள்ள பகுதிகளில் வாழும் 380 குடும்பங்களுக்கு, அடுத்த வாரமளவில் இப்பாத்திரங்கள் விநியோகிக்கப்படுமாம்.

குடும்பமொன்றுக்கு வழங்கப்படவிருக்கும் பாத்திரங்களின் பெறுமதி இலங்கை நாணயத்தில் ரூபா 1000/= இருக்கும் என்று, திட்டமிடல் அதிகாரி ஒருவர் தெரிவிக்கிறார்.

## வடக்கு-கிழக்கு நேயர்கள் கவலை

வடக்கு கிழக்கு இணைந்த தமிழ்பேசும் மக்களின் மாநிலத்தில் தமிழ் ஒலிபரப்பைத் தெளிவாக கேட்பதென்றால், குதிரைக் கொம்பு போன்ற நிலையில் நிலைமையுள்ளது. இக்குறைபாடு நீங்காததன் காரணமாக இவ்விரு மாநிலங்களிலும் 25 லட்சம் தமிழ் பேசும் மக்கள் பாதிப்படைந்துள்ளனர்.

வடக்கு கிழக்கு நிலவரங்கள் மட்டுமல்லாது தெற்கு, மலையக நிலவரங்கள் உட்பட செய்திகள், அரசாங்க அறிவித்தல்கள், ஊரடங்கு நேரங்கள், போக்குவரத்துச் சேவைகள் பற்றிய செய்திகளைக்கூட உடனுக்குடன் அறிந்து கொள்ள முடிவதில்லை.

பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளிடம் முறையிடும் நிலைமையில் எவ்வித மாறுதலும் ஐந்து வருடங்களாக ஏற்படவில்லை. ஆனால் கிழக்கில் கந்தளாய், அம்பாறை ஒலிபரப்பி மூலமாக தமிழ் மொழிக்கு பதிலாக சிங்கள சேவைகளின் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

இவற்றைத் தட்டிக்கேட்பார்கள் யாருமில்லை என்ற காரணத்தால் சம்பந்தப்பட்டவர்கள் தமிழ் ஒலிபரப்பை வடக்கிலோ. கிழக்கிலோ ஆரம்பிக்கும் நோக்கமிலலாதவர்களாக உள்ளனர். எமது பகுதியில் உள்ள நாடாளுமன்ற பிரதிநிதிகள் கூட இதுவிடயத்தில் அக்கறைப்பட்டுச் செயல்படவில்லையென்று பலர் கவலை தெரிவிக்கிறார்கள்.

## தற்போதைய நிலைமைகள் குறித்து ஈ. ஐ. மு. அறிக்கை

இன்று தமிழ் பேசும் மக்கள் படும் துயரத்தைக் களைவதற்கு பின்வரும் தீர்வினை ஈழவர் ஜனநாயக முன்னணி அறிக்கையொன்றில் முன்வைத்துள்ளது;

வடகிழக்கின் நிரந்தர அமைதிக்கு ஏதுவாக இந்தியப்படை வெளியேறுவதற்கு கால அட்டவணை தயாரிப்பதற்கு முதல் படியாக யுத்த நிறுத்தம் ஒன்றினை அறிவித்து, இந்தியப்படையினர் கேந்திர மையங்களில் நிலைகொள்ளவேண்டும். இதன் மூலமே ஆயுதக் களைவு என்ற பேரில் தோற்றுவிக்கப்பட்டுள்ள யுத்தச் சூழ்நிலை களையப்பட முடியும். யுத்தச் சூழ்நிலை களையப்பட்டால் மட்டுமே நேர்மையான அரசியல் தீர்வினை அடைவது பற்றி எவரும் ஆழ்ந்து சிந்தித்துச் செயற்பட முடியும். இவ்வறிக்கைக்கு தமிழீழ விடுதலைப் புலிகளும் ஆதரவாகச் செயற்படுவார்கள் என, பூரணமாக நம்புகிறோம்.

## தேயிலைக்கு மூன்றும் இடம்

இலங்கைக்கு அந்நியச் செலவாணியைப் பெற்றுத்தருவதில் முதலிடம் பெறுவது தேயிலை ஏற்றுமதி என்பது தெரிந்ததே. ஆனால், இவ்வருடம் அது மூன்றும் இடத்துககுத் தள்ளபபட்டு விடுமென மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

வெளிநாட்டில வசிக்கும் இலங்கையர் அனுப்பும் பணம முதலிடம் பெறுகிறது. அவர்களின் மூலம் 13.5 பில்லியன் ரூபாககளும், அடுத்து தைதத ஆடைகளின் மூலம் 11.6 பில்லியன் ரூபாக்களும் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

வரட்சி, வேலைநிறுத்தம், அமைதியற்ற நாட்டு நிலைமைகள் போனறவற்றால் முதல் ஆறுமாதங்களில் தேயிலை உற்பத்தி வீழ்ச்சியடைந்திருப்பதே, அதுமூன்றாமிடத்திற்குத் தள்ளப்படுவதற்குக் காரணமாம்.

## இரவில் ....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி

இரண்டு வாரங்களுககு முன்னர் கண்டிப் பகுதியில் அலுத்வத்த என்ற இடத்தில் எட்டு இளைஞர்களின் சடலங்கள் இவ்வாறு காலையில் கிடந்ததை மக்கள் பார்ததனர். இப்போது இத்தகைய நிகழ்ச்சிகள் அங்கு நாளாந்தம் நடைபெறும் துயர நிகழ்ச்சிகள் ஆகிவிட்டன.

## கைப் புண்ணுக்கு

இலங்கை மக்கள் தற்போது பயங்கரவாதத் துயரப் புயலுக்குள் அகப்பட்டுள்ளார்கள் என்றும், இதுபற்றிய உண்மைகளை அறிய ஒரு விசாரணைக் குழுவை நியமிக்குமாறும் எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா புதனன்று நாடாளுமன்றத்திற் கோரினர். இதற்கு விசாரணையெதுவும் அவசியமில்லை.

இதனை ஆராய்ச்சி செய்யப் பூதக்கண்ணாடியும் தேவையில்லை. இதனைத் தோற்றுவித்த காரண கர்த்தாக்களும் குற்றவாளிகளும் மாறிமாறிப் பதவிக்குவந்த எஸ்.எல்.எவ். பி, யூ என் பி. ஆட்சியாளர்களே.

இப்பத்திரிகை, இல. 118, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தால் 11-8-1989இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது
Registered as a newspaper at the General Post Office, Sri Lanka, Under Q. J. 78/89.